# RAMA DOSS : :

BY

**K. MADURAIMUDALIAR,**
Tamil Pundit, S. P. G. High School, Madras.

OFFICE OF ... 15 APR 192 ... MAD

T. V. CHELLAPPA SASTRY & SONS.
55, 56 Nattupillaiyar Coil Street,
*MADRAS.*

1926

[Price 6 Annas.

# இராம தாசர்

OFFICE OF THE REGISTRAR
15 APR 192
MADR

திருப் பவுற் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்
கு. மதுரை முதலியார்
இயற்றியது.

சென்னை :
டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்
வெளியிட்டது.

1926

92:4198
N26
176445

…சய்தது.]

[விலை அணு 6.

Printed at the
T. V. Chellappa Sastri & Sons,
55-56, Nattu Pillaiyar Koil Street,
Sowcarpet, G. T. MADRAS.

600 008.
126445

ஸ்ரீ

# முகவுரை.

---

## பக்தி.

கடவுளிடத்தில் மக்கள் காட்டும் அன்பே பக்தி எனப்படும். இப் பக்தி யில்லாத ஒருவன் மனிதர் எண்ணிக்கையில் உறுன்.

இறைவனை யடைதற்குரிய வழிகள் பல வுள. அவைகள் எல்லாவற்றிலும் பக்தி யாகிய வழியே அப் பரமனை எளிதில் காட்டுவிப்பது. கடந்த ஞானிகளின் அறிவிற்கும் எட்டாது நிற்கும் கடவுளைப் பக்தி யென்னும் கயிற்றுற் கட்டி, நமது விருப்பின்படி நடத்தலாம். உண்மைப் பக்தியை யுடைய உத்தமர்க்குக் கடவுள் அடிமையைப் போல் வேலை செய்யும் இயல் புடையவர். பக்தியினுல் அப் பரந்தாமரது திருவடிகளை யடைந்தவரே யென்றும் இன்ப முற்று வாழ்பவராவர். அங்ஙன மின்றி, இறைவரை இறைப் பொழுதும் நினையாது இறுமாந் திருப்பவர், செல்வத்திற் சிறந்தோரே யாயினும், அவர் நுகரும் இன்பம் துன்பமே யாகும். என்றும் அழியாததா யுள்ள அப் பேரின்பத்தை யனுபவிக்க விரும்புவோர், விருப்பு வெறுப் பற்றுள்ள விமலனது திருவடியில் இடை யறுத பக்தியைச் செலுத்தி வரவேண்டும்.

கு. ம.

---

## பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | பெற்றோரை யிழத்தல் ... ... | 1 |
| 2. | குரு உபதேசம் ... ... ... | 8 |
| 3. | இறைவன் அருளால் இறந்தவன் எழுதல் ... | 13 |
| 4. | எருமை உருக்கொண்டு எம்பிரான் தோன்றல் ... ... ... | 17 |
| 5. | கோபன்னர் தாசீல் உத்தியோகம் பெறுதல் ... ... ... ... | 25 |
| 6. | மலைமீது கோயிலை மாண்புடன் கட்டுதல் ... | 32 |
| 7. | சிறைச் சாலைத் துன்பம் ... ... | 38 |
| 8. | கடவுளின் கருணைச் செயல் ... ... | 57 |
| 9. | பழம் பிறப்பைப் பகர்தல் ... ... | 61 |
| 10. | அரசரும் பக்தர்க்கு அடிபணிந்து நிற்றல் ... | 65 |
| 11. | இராம தாசர் பரம பதஞ் செல்லுதல் ... | 69 |

ஸ்ரீ

# இராம தாசர்.

## பெற்றோரை யிழத்தல்.

திருமகள் விரும்பி வசிக்கும் நாடு பலவற்றுள் ஐதராப் பாக்கம் என்பது ஒன்று. இது பல வளங்களும் நிறைந்துள்ளது. இந் நாட்டில் சிறந்த கோட்டைகள் சில உள. இவை, பகைவர்க்குப் பயத்தை யுண்டாக்கிப் பதிக்கு ஓர் அழகைத் தந்தன. அக் கோட்டைகளின் உள்ளிடத்தும் வெளியிடத்தும், சிறந்த போர்வீரர் பலர், போர்க் கோலத் துடன் எப்பொழுதும் உலாவிக்கொண்டிருப்பர். இந் நாட் டில் அழகிய மாடங்கள் பல உண்டு. அவைகள், காண் போர் கண்ணைக் கவரும் சக்தி யுடையன. அச் சிறந்த மாடங்களில் மயிலை யொத்த மகளிர் மாண்புடன் விளங்கு வர். அவ் வூரிலுள்ள கடைவீதிகளுக்குக் கணக்கே யில்லை. ஆங்கே, நவரத்தினங்களையும், நவதானியங்களையும், மற் றைப் பொருள்களையும் விற்பவர்களின் ஓசை, கடலின் ஓசையை ஒக்கும். அந் நாட்டிலுள்ள மக்கள், அறிவிற் சிறந்தவர்; ஆண்மை யுடையவர்; கல்வியிற் கடல் போன்றவர்; நல்லொழுக்கத்தில் உயர்ந்தவர்; கற்பையே கலனாக அணிந்துள்ளவர். இவ்விதம் பலவகையிலும் உயர்ந்

துள்ள அந்நாட்டு மக்கள், மாலைப் பொழுதில் உலாவு வதற்குப் பூஞ்சோலைகள் பல ஆங்கே பொலிவுடன் விளங்கும்.

இவ்வண்ணஞ் சிறந்து விளங்கிய ஐதராப்பாக்கத்தைத் தானேஷா என்னும் மகம்மதிய அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் குடிகளிடத்தில் பேரன்புடையவன்; 'குடி உயரக் கோல் உயரும்' என்பதை நன்கு உணர்ந்தவன்; குடிகள் துன்பமடையின், அத் துன்பம் தனக்கு நேர்ந்ததென்றெண்ணி மனம் வருந்துவான்; இரப்போர்க்கு இல்லையென்று சொல்லாத இயல்புடையவன்; அந்தணர்பால் அளவிலாத அன்புடையவன்.

இத்தகைய மன்னனிடம், அக்கன்னர் மாதன்னர் என்னும் பெயருடைய பிராம்மணச் சகோதரர் இருவர் அமைச்சர்களாக அமர்ந்திருந்தனர். இவர் நுண்ணறிவுடையவர்; அரசாட்சிக்கு வேண்டிய கலைகளை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவர்; அரசனுக்கு இரு கண்களென விளங்குபவர்; அரசனது நன்மையையே நோக்கி நிற்பவர்; அரசன் செங்கோலினின்றும் வழுவாது அரசு புரிதற்குச் சிறந்த துணையாயிருப்பவர். நல்லமைச்சர்கள் இல்லாத அரசு அழிந்து படும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. கொடுங்கோல் மன்னனும், அறிவுடைய அமைச்சர்களின் நல்லுரையால் செங்கோலன் ஆதற் கூடும். அறிவிற் சிறந்த அரசரும், கொடிய மந்திரிகளின் போதனையால், நல்லறிவு அழிந்து தீய வழியிற் புகுந்துளர். ஆதலின், ஓர் அரசு உயர்ந் தோங்கி ஒளிர்வதற்கும், தாழ்வடைந்து தலை சாய்வதற்கும் அமைச்சரே துணைக்காரணமாய்த் தோன்றியுளர்.

தானேஷாவின் அமைச்சராகிய அக்கன்னர் மாதன்னர் என்பவர்க்கு லிங்கன்னர் என்னும் பெயரையுடைய

மைத்துனர் ஒருவர் இருந்தார். அவர், நெற்கொண்ட பல்லி யென்னுங் கிராமத்தில் வசித்து வந்தார். அம்மறைய வர், அந்தணர்க்குரிய அறு தொழில்களாகிய ஓதல், ஓது வித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ப வற்றைக் கைக்கொண்டு இல்லறம் செவ்வனம் நடத்தி வந்தனர். இல்லறத்தில் வாழவேண்டிய முறைப்படி வாழ்ந்து புகழடைந்தோருள் இவர் ஒருவர். இவ் வேதியர், தான் பெறுமவற்றைத் தென்புலத்தார், தெய்வம், விருந் தினர், உறவினர் எனும் பலருடன் பங்கிட்டு உண்ணும் பண்புடையவர். இவ் வருமறையாளர், திருமாலின் திரு வடிகளில் இடையறாத அன்பைச் செலுத்தி வந்தார்.

இவ்வண்ணம் பல நற்குணங்களும் வந்து தங்குவதற்கு இடமாயுள்ள லிங்கன்னரின் மனைவி, காமாம்பாள் என்னும் பெயரினை யுடையவள். அம் மாது, அழகில் திருமகளை யொப்பாள்; கல்வியில் கலைமகள் அனையாள்; அருளில் அரன் மனைவி ஆவள். இம் மங்கை தன்னுடைய நாய கனைத் தனது இன்னுயிர்போல் காப்பாற்றி வந்தனள். இம் மாதரசி தனது பெயர்க்கேற்ப லிங்கன்னரைப் பல்வகை யிலும் மகிழ்வித்து வந்தாள். நாயகனும் நாயகியும் மனம் ஒருமித்து வாழ்ந்தாலன்றி இல்லறம் இனிது நடைபெறா தாகையால், லிங்கன்னரும், அவர் மனைவி காமாம்பாளும், உயிர் ஒன்று உடலிரண்டு எனக் கண்டோர் சொல்லும் வண்ணம், இல்லற நிலையில் சிறப்புடன் ஒழுகி வந்தனர்.

லிங்கன்னரும் அவர் இல்லாளும், காமனும் இரதியும் போல், இல்லறத்தில் அடையும் இன்பங்கள் அனைத்தினை யும் அடையப்பெற்று இன்புற்று வாழ்ந்து வந்தனர். எனி னும், துன்பங் கலவாத இன்பம் இல்லை யென்பது உண்மை யாதலால், அவர்கள் இன்பத்திலும் துன்பம் வந்து கலப்

புற்றது. அஃதாவது, மனைக்கு அழகைக் கொடுக்கும் மக்கள் இல்லையே என்பதனால் அவர்கட்கு உண்டாகிய மனக் கவலையே.

பல செல்வங்களினும் மக்கட் செல்வமே மாந்தர்க்கு மகிழ்ச்சியை அளிப்பது. குழந்தைகளின் குதலைச் சொற்களைக் கேளாதவனே, குழல் இனிது, யாழ் இனிது என்று சொல்பவன். மக்களின் மெய்யைத் தீண்டுதலால் உண்டாகும் இன்பத்தினும் மேலான இன்பம் இவ் வுலகில் இல்லை. ஆதலின், காமாம்பாளும் விங்கன்னுவும், புத்திரச் செல்வத்தைக் குறித்துத் திருமாலைத் தொழுதுவந்தனர். அவ் விறைவர், அன்பர்கள் வேண்டியவற்றை வேண்டியவாறே நல்கும் கருணைக் கடலாதலால், காமாம்பாள் அக் கடவுளின் இன்னருளால் ஓர் ஆண் மகவை யீன்றாள். அக் குழந்தையைக் கண்ட தாய் தந்தையர் அளவிலாத ஆநந்தமுற்றனர்; 'இம்மையிற் பெறவேண்டிய செல்வத்தைப் பெற்றோம்', என, அவர்கள் மகிழ்வடைந்தார்கள். காமாம்பாள் ஆண்பிள்ளை பெற்றதைக் கேட்ட அவள் உறவினர், அம் மாதின் வீட்டிற்கு வந்து, குழந்தையைக் கண்டு களிப்புற்றனர். விங்கன்னர், ஆண்பிள்ளை பிறந்தான் எனும் ஆநந்தத்தால், பலர்க்குப் பலவகைப் பொருள்களை வழங்கினார்.

இவ்வண்ணம் பதினொரு நாட்கள் கழிந்தன. பன்னிரெண்டா நாள், மறையவர் பலர் ஒன்றுகூடி, அக்குழந்தைக்குக் கோபன்னன் என்னுந் திருநாமம் இட்டனர். அப் பிள்ளை வளர்பிறைச் சந்திரனைப்போல் அழகுற்று வளர்ந்து வந்தான். விங்கன்னர் தன் புத்திரனுக்குத் தகுந்த காலத்தில் உபநயனம் செய்வித்து, ஒரு நல்ல நாளில் அவனைப் பள்ளியில் வைத்தார். கோபன்னன், திருமாலின் திருவரு

ளால் உதித்தவனுகையால், நுண்ணறிவுடன் விளங்கினுன்; கலைகள் அனைத்தையும் கடிதின் உணர்ந்தான். இளமையி லேயே இறைவனிடத்தில் அவனுக்கு அன்பு உண்டாயிற்று. அவன் சிற்சில சமயங்களில் மெய்ம் மறந்து கடவுளைத் துதிப் பான். இறைவனிடத்தில் அன்பைச் செலுத்தாத ஒருவன் பல கலைகளைக் கற்றுத்தான் பயனென்ன? கலைகளைக் கசடறக் கற்றல், கடவுளின் திருவடியைக் காண்பதற்கே யென்பதை யுணராதார், பல நூற் கற்றும், கல்லாரையே ஒப்பர்.

கோபன்னன், திருமாலின் திருவடித் தாமரையே பிற விப் பெருங்கடலை யெளிதில் கடத்தற் கேற்ற தெப்பமென அறிந்தான். ஆகையால் அவ்வறிஞன், அப் பெருமான்பால் பேரன்பு பூண்டு வந்தான். இவன் இவ்வண்ணம் ஒழுகி வரு நாளில், கோபன்னன் வசித்துவரும் அந் நெற்கொண்ட பல்லியில், ஒரு நாள் ஓர் இடத்தில் இராமாயணப் பிரசங்கம் நடைபெற்றது. இராமபிரானது சரித்திரம் பலர்க்கும் இன் பம் பயக்குமாதலால், அக் கதையைக் கேட்கக் கணக்கற்ற மாந்தர் சென்றனர். பெருங் கூட்டத்தைக் கண்ட கோபன் னன், அவர்களுடன் சென்று கதையைக் கேட்டுக்கொண் டிருந்தான். கதை முடிவு பெற்றது. கூட்டம் கலைந்தது. கோபன்னனும் தனது வீட்டை நோக்கிச் சென்றுன். அவ் விதஞ் செல்லும் வழியில், பக்தியாகிய கடலுள் ஆழ்ந்துள்ள அச் சிறுவன், 'இராமபிரான் திரு அவதாரஞ் செய்த அக் காலத்தில் யான் பிறந்தில்லாமற் போனேனே! பிறந்திருப்ப னேல், அறிவிற் சிறந்த அனுமனைப் போலவும், சுகுணத்திற் சிறந்த சுக்கிரீவனைப் போலவும், இமைப் பொழுதும் பிரி யாத இலக்குமணனைப் போலவும், யானும் அப் புண்ணிய புருடனுக்கு அடிமையாகி, அவ்விறைவற்கு என்னுல் கூடிய

உதவி புரிந்திருப்பே னல்லவா! இராம, அடியவன் உனது அருளுக்கு உரியவனாதல் என்றோ! உனது அழகை, அடி முதல் முடிவரைக் கண்டு களிக்க எனது இரு கண்களும் விரும்புகின்றன', எனத் தனக்குள் கூறிக்கொண்டே சென்று வீட்டை யடைந்தான். கோபன்னன் அல்லும் பகலும் அரி யின் திரு வுருவத்தையே சிந்திப்பன்; அவரது திருநாமங் களையே வாயாரக் கூறுவன்; அப் பெருமானது புகழையே பன்முறையும் புகழ்ந்து பேசுவன்.

பக்திக் கடலில் மூழ்கியுள்ள கோபன்னன், சிறிது நேரமுங் கடவுளை மறவாது காலத்தைக் கழித்து வர, அவன் அருமைத் தந்தை லிங்கன்னர் பரமபதஞ் சென்றனர். அத னால் அப் பக்தன் அளவிலாத் துயரில் ஆழ்ந்தான்; 'என் னுடைய தாய் மங்கல நாணை யிழக்க நேரிட்டதே! அவள் முகத்தை யான் எவ்வாறு காண்பேன்! அவள் துக்கத்தை யெவ்வாறு போக்குவேன்! நாயகனையிழந்து உயிருடன் இருக் கும் பெண் அடையும் சுகம் ஒன்று உண்டோ? எனப் பல வாறு துக்கித்தான். கோபன்னன் துயரம் ஒருபுறம் இருக்க, அவன் தாய், லிங்கன்னர் இறந்ததைக் கண்டு, அடியற்ற மரம்போல் தரைமிசைச் சாய்ந்தாள். அம்மாது கற்பிற் சிறந் தவளாகையால், நாயகன் இறந்ததைக் கண்டு அம் மங்கை யும் இறந்தனள் எனச் சிலர் நினைத்தனர். ஆனால் காமாம்பாளின் உயிர் நீங்கவில்லை. விதியைத் தடுக்க ஒருவராலும் முடியாதன்றோ? சிலர் அம் மாதின் வாயில் சிறிது நீர் கொண்டுவந்து விட, அவள் மூர்ச்சை தெளிந்து கண்விழித்துப் பார்த்தாள்; தன்னுடைய நாயகன் உடலைக் கண்டாள். அப்பொழுது அவளுக்கு உண் டாகிய துயரத்தை அளவிட்டுரைக்க முடியாது. கைகளைக் கொண்டு மார்பினின்றும் உதிரம் பெருக அறைந்து கொண்

டாள்; எமதருமனைப் பலவாறு பழித்துரைத்தாள்; அய்யகோ வென அலறினாள். அவள் இரு கண்களும் கொவ்வைக் கனி போல் சிவந்தன. அவ் வுத்தமி அழுத கண்ணீர், சிறு அருவி யெனப் பெருகிற்று.

இவ்வாறு துன்பக் கடலுள் ஆழ்ந்து செயலற்றுக் கிடக்கும் அன்னையைக் கோபன்னன் பலவாறு தேற்றினான்; பின்னர், தந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாம் செவ்வனே செய்து, அவரை அடக்கஞ் செய்தான். தந்தையின் பிரிவு கோபன்னனுக்குச் சில நாள் துன்பத்தையே கொடுத்து வந்தது.

கோபன்னனின் அருமைத் தாயாகிய காமாம்பாள் ஒவ்வொரு நாளும் தன்னுடைய நாயகனையே நினைந்து நினைந்து வருந்தி வந்தாள். அம்மாதின் உடல் நாளுக்கு நாள் மெலிந்துகொண்டே வந்தது. மனக் கவலைக்கு மருந்தில்லை யாகையால், மருந்துகளால் அம் மடந்தையின் மனப் பிணி நீங்கவில்லை. சில நாட்குப் பிறகு அக் கற்பரசியும் நற்கதி யடைந்தாள். தந்தையையும் தாயையும் இழந்த கோபன்னன், மனித ஆதரவு அற்றவனாகி, இறைவனது இணையடியாகிய ஆதரவில் நின்றான். உலகில் தோன்றும் எல்லாப் பொருள்களும் அழியுந் தன்மை யுடையன என்பது அவனுக்கு வெள்ளிடை மலையென விளங்கிற்று; வைராக்கியம் வன்மை யுற்றது. கடவுள்பால் வைத்த அன்பு பெருகிற்று. பொய்ப் பொருள்களின்மேல் அன்பைச் செலுத்துதல் துன்பத்திற்கே காரணமாகும் என்பதை அவன் நன்குணர்ந்தான். இவ்விதம் அறிவிற் சிறந்த அப் பக்தன் இரவும் பகலும் இராமனையே தொழுது சில நாட்களைக் கழித்து வந்தான்.

## இரண்டாம் இயல்.

### குரு உபதேசம்.

கோபன்னர் தன்னுடைய முன்னோர்கள் வணங்கி வழி பட்டு வந்த இராம விக்கிரகத்தையே ஒவ்வொரு நாளும் தொழுது வந்தார். அப் பக்தர், தினந்தோறும், குளிப்பதற்குக் குளத்திற்குச் செல்லும்போது, தன்னால் தொழப்பட்டு வருபவரும், சீதா இலக்குமண அநுமார் சகிதமா யுள்ளவருமாகிய இராம பிரானை ஓர் அழகிய பெட்டியில் வைத்துத் தன்னுடன் கொண்டுபோய், தானும் குளித்து, இராமர் முதலிய விக்கிரகங்களையும் குளிப்பாட்டி வருவது வழக்கம். கோபன்னர் இவ்வண்ணம் இராம பிரானிடத்துப் பேரன்பு கொண்டு, அக் கடவுளே முழுமுதற் கடவு ளென்ற திட எண்ணங் கொண்டு சில நாள் கழித்து வந்தார்.

ஒரு நாள், அவ் வந்தணர், விக்கிரகங்கள் அடங்கியுள்ள பெட்டியுடன் குளிப்பதற்குக் குளத்திற்குச் சென்றார். சென்ற கோபன்னர், தான் குளித்த பிறகு, ஒவ்வொரு விக்கிரகத்தையும் குளிப்பாட்டி, அவைகளை ஆடையாபரணங்களால் அலங்கரித்தார். பின்னர், அம் மறையவர் இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பி, "அடியவர்களை ஆதரிக்கும் அண்ணலே, மூலமே யென்ற கரிமுன் வந்த முதல்வரே, அன்பிற்கு வயப்பட்டுள்ள அழகரே, பாண்டவர்க்குத் தூது சென்ற பரமரே, அடியேனைப் பிறவிப் பெருங் கடலினின்றும் கரை யேற்றுவிப்பது என்றோ?" என்று பலவாறு இறைவனைத் துதித்து, கண்களினின்றும் ஆநந்தக் கண்ணீர் பெருக மெய்ம் மறந்து நின்றுகொண்டிருந்தார்.

அவ்வேளையில் காசியிலிருந்து சேது யாத்திரைக்குச் செல்பவராகிய கபீர் தாசர் அங்கு வந்தார். அப் பெரியோர், கோபன்னர் நின்றிருந்த நிலையைக் கண்டார். நல்லோரை நல் லோரே நாடுவர் என்ற வண்ணம், கபீர்தாசருக்குக் கோபன் னரை விட்டுப் பிரிய மனமில்லை. அப் பக்தர் கோபன்ன ரது மெய்யன்பை யறியவேண்டுமென விரும்பினர். பிறகு கபீர்தாசர், கோபன்னர் அறியாவண்ணம், விக்கிரகங்கள் அடங்கி யுள்ள அப் பெட்டியை எடுத்துக் குளத்தில் எறிந்து விட்டு, குளத்தின் மேற்கரை சென்று நின்றுகொண்டிருந்தார். சிறிது நேரஞ் சென்றபின், கோபன்னர் கண்களைத் திறந்து விக்கிரகங்களை நோக்கினர்; பெட்டியோடு விக்கிரகங்கள் இல்லாதிருத்தலைக் கண்டார்; நாற்புறமும் நோக்கினர்; அவைகளை எப்புறமும் கண்டாரில்லை; ஆனால் மேற்குக் கரையில் மாத்திரம் ஒரு துலுக்கர் நின்றுகொண்டிருக் கக் கண்டார். 'துலுக்கர் நமது விக்கிரகங்களை விரும்பு வதற்குக் காரணமில்லையே,' என்று நினைத்து அவர்மேற் கொண்ட ஐயம் நீங்கினர். பின்னர், கோபன்னரின் துய ரம் மிகுந்தது. அப் பக்த சிரோமணி, பழந்தனம் இழந்தோர் போல் படிமிசை வீழ்ந்தார்; புரண்டு புரண்டு அழுதார்; 'என் முன்னோர்கள் காப்பாற்றி வந்த அழியாப் பொருளை யிழந்தேனே! எனது உயிர்க்கு உறுதி பயக்கும் அவ் வுயர்ந்த பொருளைக் களவாடிய கள்வன் எவனோ அறியேன்,' எனப் பலவாறு துக்கித்தார்.

இவ்விதம் துக்கக்கடலுள் மூழ்கி வாடும் பக்தரைப் பிற விக் கடலி னின்றுங் கரையேற்றக் கருதிய கபீர் தாசர், விரைந்தோடி வந்தார்; மண்மீது புரளும் அம் மறையவரைத் தூக்கி நிற்கச் செய்தார். பிறகு, கபீர் தாசர், அப் பக்தரை நோக்கி, "ஐய, பித்தனைப் போல் நீ இவ்வாறு மண்மீது

புரளுவதற்குக் காரணம் யாது?" என்று கேட்டார். கோபன்னருக்கு உண்மையை உரைக்க மனமில்லை. அதற்குக் காரணம், கபீர் தாசர் துலுக்கரா யிருத்தலே. இருப்பினும், கோபன்னர், கபீரைப் பார்த்து, "ஐய, எனது துயரை என்னென்று கூறுவேன்! என்னுடைய மூதாதைகளால் காப்பாற்றப்பட்டு, என்னுடைய கைக்கு வந்த அழியாப்பொருளை இன்று இழந்தேன். அவ் வரும்பொருளை யான் பெறுவிடில், எனது உயிர் நிற்றல் அரிது," எனப் பெருமூச்சு விட்டுக் கூறினர். பின்னர், கபீர தாசர், "அறிவிற் சிறந்தோய், நீ கூறுவது எனக்கு நன்றாய் விளங்க வில்லை. இவ் வுலகில் தோன்றும் எல்லாப் பொருள்களும் அழியுந் தன்மையையுடையனவாயிருக்க, உன்னுடைய மூதாதைகள் காப்பாற்றி உனக்கு வைத்த அழியாப் பொருள் யாது? அதனை எனக்கு நன்கு விளங்கும்படி கூறுவாய்," என, ஒன்றும் அறியாதவர் போல் வினவினர். கபீர் தாசரது வினவுக்கு விடையளிக்கவேண்டுவது அவசிய மானதால், பக்திபிற் சிறந்த கோபன்னர், உண்மையை அவரிடம் ஒளியாது கூறினர். அதனைக் கேட்ட கபீர் புன்னகை புரிந்தார். பின்னர், அப் பெரியவர், கோபன்னரை நோக்கி, 'பக்திபிற் சிறந்தோய், இதற்காகவா இவ்விதம் வருந்துகின்றாய்! நன்று, நன்று. நீ உண்மையில் இராம பிரானிடத்துப் பக்தியைச் செலுத்துபவனாயின், அப் பெருமானை, மும்முறை அழைத்துப்பார். அக் கடவுள் உனது அழைப்பிற்கு மனமிரங்கி கரையேறி வருவராயின், நீ உண்மைப் பக்தனென உலகால் புகழப்படுவாய். இல்லையேல், நான் உன்னைச் சிறிதும் நம்பேன்," எனப் புகன்றார். உடனே கோபன்னர், இரு கரங்களையுஞ் சிரமேற் கூப்பி, "ஆபத்துக் காலத்தில் அடியவரைக் காக்கும் ஆதி நாராயணனே, நம்பினவரை நட்டாற்றில்

விடாதே நரசிம்மமே, கருணையின் வடிவாயுள்ள கமலக் கண்ணனே, இச்சமயம் கரையேறி வந்து அடியவனைக் காப்பாற்றுயோ?" எனக் கதறினர். இறையவர், இப் பக்தர் அழுகைக் கிரங்கி வரவில்லை. கோபன்னரின் துயரம் மிகுந்தது. அப் பக்தர் தன்னை மறந்து தரைமிசைச் சாய்ந்தார்.

இச் சம்பவங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கபீர் தாசர், 'கோபன்னர், குருவின் கிருபையைப் பெறுதவர் போலும்,' என்று தனக்குள்ளே யெண்ணி, அவரைப் பல இனிய சொற்களால் தேற்றி, சிறந்ததும், உயர் கதி யளிப்பதும், பல தேவர்களும் உச்சரித்து வருவதுமாகிய தாரக மந்திரத்தை அவருக்கு உபதேசித்தனர். பிறகு, கபீர் தாசர், கோபன்னருடன் அக் குளக்கரையி னருகு சென்று, இராம பிரானை மும்முறை அழைத்தார். அக்காலே, அடியவர்க்கு அடியவராகிய அப் பரந்தாமர், சீதா இலக்குமண பரத சத்ருக்ன அநுமர் சமேதராய்க் கரையேறி வந்து காட்சி கொடுத்தார். கபீர் தாசரது மகிமையைக் கண்ட கோபன்னர், அப் பெரியாரின் பாத கமலங்களில் வீழ்ந்தார்; அப் பக்த சிரோமணியைப் பலவாறு புகழ்ந்து துதித்தார்; 'அடியேன் கடைத்தேற, இறைவரால் அனுப்பப்பட்டவர் இப் புண்ணியபுருடரே' என்று நினைத்து ஆநந்தக் கடலுள் ஆழ்ந்தார்.

இவ்வண்ணஞ் சிறிது நேரங் கழிந்தது. பின்னர், கபீர் தாசர், கோபன்னரைப் பார்த்து, "அன்ப, யான் காசியில் வசிப்பவன். என் பெயர் கபீர் என்பர்; திருமாலின் திருப்பதிகளைத் தரிசித்துக் கொண்டு, சேது யாத்திரை செய்துவரும் வழியில் உன்னைக் கண்டேன். நான் போய் வருகிறேன்," என்று உரைத்தார். அதனைக் கேட்ட கோபன்னரின் மனம் வருத்த முற்றது. "அடியவனைக் காக்க வந்த அடிகளே, உம்மைப் பிரிந்து உயிர் வாழ்வது

எப்படி? நீர் அடிபவனுடன் கூடியிருப்பீர் என்றல்லவோ அகமகிழ்ந்தேன். யான் எவ்விதம் மறுபடியும் உம்மைக் காண்பேன்," எனக் கோபன்னர் மனங் கலங்கி யுரைத்தார். அவ்வினிய மொழிகளைக் கேட்ட கபீர் தாசரின் மனம் உண்மையில் உருகிற்று. ஆனால், அவர் சேது யாத்திரை செய்ய வேண்டுமென்ற திட எண்ணம் கொண்டிருந்ததால், கோபன்னரைப் பார்த்து, "அன்ப, மனம் வருந்த வேண்டா. நீ எப்பொழுது என்னைக் காணவேண்டுமென்று விரும்புகின்றாயோ, அப்பொழுது நான் வந்து உன்னைக் காண்கிறேன். ஆனால், நான் உனக்கு உபதேசித்துள்ள அத் தாரக மந்திரத்தை அல்லும் பகலும் மறவாது அரியைத் தொழுது வருக. அம் மந்திரத்தின் மகிமையை, அரவாபரணனாகிய அரனே தன்னுடைய மனைவியாகிய உமையினிடம் உயர்த்திக் கூறியுள்ளான் எனின், அதன் சிறப்பை யான் அதிகமாகக் கூறவேண்டுவ தில்லை," எனப் பல இனிய மொழிகள் ஆடி, விடை பெற்றுச் சென்றார். கோபன்னர், குருவின் மொழியைச் சிரமேற் கொண்டு, தாரக மந்திரமாகிய இராம நாமத்தையே உரைத்துக் கொண்டு சில நாள் கழித்து வந்தார்.

---

## மூன்றும் இயல்.

### இறைவன் அருளால் இறந்தவன் எழுதல்.

கோபன்னர், மனைவியுடன் கூடி இல்லறத்தில் ஒருவன் அனுபவிக்கவேண்டிய இன்பத்தை நுகரவேண்டுமென்ற விருப்பம் அற்றவர். அவருக்குக் கடவுளின் திருநாமங்களை வாயாரக் கூறுவதனாலுண்டாகின்ற இன்பமே சிறந்த இன்பமாக விளங்கிற்று. விவாகம் செய்து கொள்ளாது இருக்கும் நிலையே விமலனைத் தொழுவதற்கு ஏற்ற நிலை என்பது அவரது கொள்கை. ஆனால், அப் பக்தர், தாய் தந்தைகளை யிழக்க நேரிட்டதால், தன்னைக் கவனிப்பவர் ஒருவரையும் இல்லாதவரானார். 'தாய்க்குப் பின் தாரம்' என்கிற உலக வுரை அவர் நினைவிற்கு வந்தது. ஆனால் ஒருவன், இல்வாழ்க்கையிற் புகுவது இருங் கடலிற் புகுவதை யொக்கும் என்பதும் அவர்க்குத் தெரியும். ஆதலால், அவ்வறிஞரின் மனம் சிறிது நேரம் ஊசலாடிற்று; பிறகு, உடலைக் காக்கும் நிமித்தம் ஓர் உத்தமியை மணம் புரிதலே நன்று என்று தீர்மானித்தார்.

கோபன்னரின் மன உறுதியை யறிந்த அவருடைய நெருங்கிய உறவினர், தங்கள் குலத்திலேயே ஒரு பெண்ணைப் பார்த்து, நல்ல நாளில் அவ் வுத்தமரின் மணவினையை முடித்தனர். பக்தியிற் சிறந்த அப் புண்ணிய புருடனுக்கு வாய்த்த வாழ்க்கைத் துணைவி, அழகிற் சிறந்தவள்; அன்பில் அன்னையை ஒத்தவள்; நாயகனுக்குப் பணிவிடை செய்வதில் பணிப் பெண்ணைப் போன்றவள்; பொறுமையில் பூமிதேவியனையாள். கோபன்னர் இத்தகைய சிறந்த மனைவி

யுடன் கூடி, இல்லறத்தில் இருக்கவேண்டிய முறைப்படி உலகம் உவக்க வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு நாளும், அளவற்ற அந்தணர் அன்னம் அருந்த அவர் வீட்டிற்கு வருவர். அப் பக்த சிரோமணி, தன்னுடைய தந்தை யீட்டிய தனத்தை யெல்லாம், பாகவதர்கட்கு அன்ன மிட்டே அழித்தார். எல்லாத் தானங்களிலும் அன்ன தானமே சிறந்ததென்பதை அவர் நன்குணர்ந்தவர்.

இவ்வண்ணம் கோபன்னர் இல்லறத்தை இனிது நடத்தி வருகையில், அவர் மனைவி, கடவுளின் கருணையால் ஓர் ஆண்மகவை யீன்றாள். பிறகு அப் பக்தர் உரிய காலத்தில் அப் பிள்ளைக்கு வேதியரைக் கொண்டு சுந்தரன் என்ற பெயர் இட்டு அருமையாக வளர்த்து வந்தார்.

ஒரு நாள், கோபன்னர், அடியவர்களுக்கு அன்ன மிட்டுக் கொண்டிருக்கையில், அவருடைய அருமைப் புத்திரன், சுந்தரன் என்பான், தவழ்ந்து சென்று, சாதம் வடித்த கஞ்சி சேர்ந்த குட்டையில் விழுந்து இறந்தான். அதனை யுணர்ந்த அப் பிள்ளையின் தாய், அறிவிற் சிறந்தவளாகையால், 'விடயத்தை வெளிப்படுத்துவோ மாயின், அந்தணர்கள் அனைவரும் அன்னம் அருந்தார்,' என்று கருதி, யாவர்க்குந் தெரியாது அக் குழந்தையை ஒரு புறம் மறைத்து வைத்தாள். அடியவர்கள் அனைவரும் அறுசுவை யுண்டி அன்புடன் அருந்தி, தாம்பூலங் கைக்கொண்டு, அறத்தின் வடிவமாயுள்ள கோபன்னரிடம் விடை பெற்றுச் சென்றார்.

அந்தணர் சென்றதும், கோபன்னரின் மனைவி தன்னுடைய நாயகனுக்குப் பிள்ளையைக் காட்டி, அவன் இறந்த விதத்தையுங் கூறிக் கோவெனக் கதறினாள். அப் பக்தர் புத்திரச் சோகத்தால் செயலற்றுக் கீழே விழுந்தார்; சிறிது

நேரஞ் சென்றபின் தானே யெழுந்தார்; மனைவியின் மன உறுதியைக் கண்டு வியந்தார். பிறகு அவருக்கு ஓர் எண்ணம் பிறந்தது. அஃதாவது, இராம சந்திரரின் திருவருளால் சுந்தரன் உயிர் பெறக்கூடும் என்பதே. அவர் உடனே சுந்தரனைத் தோள்மேற் கொண்டு, இராம பிரான் எழுந்தருளியுள்ள திருக் கோயிலை யடைந்தார்; அப் பெருமாளின் முன்னிலையில் பிள்ளையைக் கிடத்தினர். பின்னர், அப் பக்த சிரோமணி, இராம விக்கிரகத்தை நோக்கி, "உலகினை யெல்லாம் உண்டு, உமிழ்ந்து, காக்கும் உத்தமரே, பக்தர்களின் துன்பத்தைப் போக்கும் பரந்தாமரே, இராமாவதாரத்தில் அயோத்தியின்கண் வசித்து வந்த அருமறையாளர் ஒருவரின் புதல்வன் இறக்க, அவர் கொண்ட துன்பத்தைக் கண்டு சகியாது, அப் பிள்ளையின் உயிரைக் கொடுத்த உத்தமர் நீரன்றோ? கிருட்டிணவதாரத்தில், உம்முடைய ஆசிரியராகிய சாந்தீப முனிவருக்குக் குரு காணிக்கை கொடுக்க விரும்பி, அம் முனிவரின் மனைவியார் விரும்பிய வண்ணம், முதலையினல் விழுங்கப்பெற்ற அவ் வம்மையாரின் புதல்வரை அழைத்தருளிய அண்ணல் நீரன்றோ? இப்பொழுது உமது பாத தாமரையே கதி யெனக் கருதிக் காலத்தைப் போக்கும் அடியேனது துன்பத்தை நீக்காதிருத்தல் உமக்குச் சரியோ? எனக் கதறிக் கண்ணீர் பெருக நின்றார். இவ்விதம் நின்ற கோபன்னரின் புதல்வன் இறைவனது இன்னருளால் உயிர்பெற்றெழுந்தான். குழந்தையைக் கண்ட பக்தர் குதூகல மடைந்தார்; இறைவனது திருவருளை நினைத்து, அப் பெருமானைப் பலவாறு புகழ்ந்து போற்றினர். பின்னர், அப் பக்தர், பிள்ளையைக் கைக் கொண்டு வீடுவந்து சேர்ந்தார். தனயனைக் கண்ட தாய், அளவிலாத ஆனந்த முற்றாள்; புதல்வனை யெடுத்து

மார்போடணைத்து முத்த மிட்டாள்; திருமாலைப் பன்முறை வாழ்த்தி வணங்கினுள். மனைவி யின்புறுவதைக் கண்ட கோபன்னரும் கரை யிலாத களிப் பெய்தினர்.

---

## நான்காம் இயல்.

### எருமை உருக்கொண்டு எம்பிரான் தோன்றல்.

பக்தியிற் சிறந்த கோபன்னர், இராம சந்திரரைச் சிறிது நேரமும் மறவாது, கபீர் தாசரால் உபதேசிக்கப் பெற்ற தாரக மந்திரத்தையே அனவரதமும் அன்புடன் உச்சரித்து வந்தார். ஒரு நாள், அம் மறையவர், இராம பிரானை நேரிற் கண்டு களிக்க வேண்டுமென விரும்பினார். ஆனால், அக் கடவுளின் தரிசனம் கிடைத்தல் மிகவும் அரிது என்பதையும் அவர் அறிவர். இருப்பினும், கபீர் தாசரின் கருணையால், அப் பெருமானைக் காணக் கூடும் என்று கோபன்னர் துணிந்தார். உடனே அப் பக்தர் கபீர் தாசரை உள்ளன்புடன் நினைத்தார். சிறிது நேரத்தில், திருமாலின் சிறந்த பக்தராகிய கபீர் தாசர் கோபன்னரின் முன் தோன்றினார். அப் பக்த சிரோமணியைக் கண்ட கோபன்னர், அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். வணங்கிய அன்பரைக் கபீர் தாசர் வாரி யெடுத்து, "அன்ப, என்னை அழைத்ததற்குக் காரணம் யாது?" என்று வினவினார்.

கோபன்னர், கபீர் தாசரை நோக்கி, "அடிகளே, உமது திரு முகத்தை யான் கண்டது, அத் திருமாலின் திரு முகத்தையே கண்டது போல் இருக்கின்றது. அடியவனுக்கு ஓர் எண்ணம் பிறந்துளது. அது முடிவு பெறுதற்கு, உமது கருணை இன்றியமையாததாய் இருக்கின்றது. அஃதாவது இராம சந்திரரைக் கண்ணாரக் கண்டு களிக்க வேண்டுமென்பதே. அப் பெருமானை நீர் மும்முறை யழைத்துக் கரையேற்றுவித்ததை அடியேன் கண்கூடாகக் கண்டுளே

ளுதலால், உமது கருணையால் அவ் விறைவரை யான் தரி சித்தல் கூடும் என்று கருதியே உம்மை யழைத்தேன். அடி யேனைக் காக்க வந்துள்ள கருணைக் கடலே, எனக்கு எவ் விதத்திலாகினும் அப் பெருமான் தரிசனம் கொடுக்கும் வண்ணம் தாங்கள் அருள் புரிதல் வேண்டும்," என்று மிக்க வணக்கத்துடன் பணிந்து நின்றார்.

கபீர் தாசர், கோபன்னரின் சிறந்த கருத்தைக் கேட்டு, அகமகிழ்ந்தார்; அப் பக்தரது அடக்கத்தைக் கண்டு ஆநந் தித்தார். பின்னர், அப் பக்த சிரோமணி, கோபன்னரைப் பார்த்து, பக்தியிற் சிறந்த அந்தண, உனது கருத்து மிகவும் சிறந்ததே. ஆனால் இராம சந்திரரின் தரிசனம் எல்லோர்க் கும் எளிதில் கிடைப்ப தன்று. கடந்த ஞானிகளும் அவ ரது கழலிணையைக் காணாது வருந்துகின்றனர். அப் பெரு மான் அரு மறையாலும் அறியப்படாதவர். அத்தகைய பெருமானின் தரிசனம் உனக்கு மாத்திரம் எங்ஙனம் எளி தில் கிடைக்கும். இருப்பினும், சில நாட்களுக்குப் பின் னர், இராம பிரான், தன்னுடைய உருவை உனக்குக் காட்டுவர். அப்பொழுது நீ அவரது அழகைக் கண்ணாரக் கண்டு களிக்கலாம்," என்றார்.

கபீர் தாசரின் உரையைக் கேட்ட கோபன்னர் மனம் சோர்ந்தார்; கண்ணீரைப் பெருக்கினார். சிறிது நேரம் ஒன்றும் பேசாது இருந்தார். பின்னர், அப் பக்தர் கபீரின் திரு முகத்தை நோக்கி, "திருமாலின் அன்பிற்கு உரியவரே, சில நாட்களுக்குப் பின் இராம சந்திரர் அடியவனுக்குக் காட்சி கொடுப்பர் எனத் தாங்கள் கூறியது, எனக்கு நகைப் பைத் தருகின்றது. எல்லாம் அறிந்துள்ள தாங்களே அங் ஙனம் கூறின், யான் என்ன சொல்லக் கூடும். மக்களின்

உடல் மழை நீரில் தோன்றும் நீர்க் குமிழியை யொத்தது என்பதை நீர் அறியீரா?

"உறங்கு வதுபோலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்ற ஆன்றோர் மொழியும் நீர் அறிந்தது தானே. அவ்விதமிருக்க, இன்னும் பல நாள் இத் தேகம் அழிவின்றியிருக்குமென, யான் எவ்விதம் நம்பி, மனப் பால் குடித்து மகிழ்வேன். தேவரீர், அடியேன்மீது கருணை கூர்ந்து அக் கருணாகரக் கடவுளை யான் கண்ணாற் கண்டு களிக்கும் வண்ணம் கருணை புரிவீர்," என்று கண்ணீர் பெருக, மறுபடியும் ஒரு முறை, கபீர் தாசரின் பாதத்தில் வீழ்ந்து பணிந்தார். கோபன்னரின் உண்மைப் பக்தியைக் கபீர் நன்கு உணர்ந்தார். பின்னர், கபீர் தாசர், "அன்பிற் சிறந்த ஐய, நீ சிறிதும் வருந்த வேண்டா. எவ்விதத்திலாகிலும் நாளைப் பகல் பதினேழு நாழிகைக்குக் கடவுள் உனக்குக் காட்சி கொடுப்பர்," எனக் கூறிச் சென்றார்.

கோபன்னர், புதையலைப் பெற்ற வறியவனைப்போல் அளவிலாத ஆநந்த மடைந்தார். அப் பக்தர் மறுநாள் அடியவர்களுக்கு வழக்கம்போல் அன்னமிடக் கருதி, அதற்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்தார்.

கோபன்னர், இவ்வாறு களிப்புற்றிருக்க, கபீர் தாசர், இரகு குல திலகனுய் விளங்கும் இராம பிரானை உள்ளன்புடன் நினைத்தார். மெய்யன்பர் நினைத்தவுடன் காற்றினுங் கடுகி வரும் அக் கடவுள், கபீர் முன் வந்து தோன்றினர். கபீர் தாசர், அப்பெருமாளின் திருவடியில் வீழ்ந்து,

"ஒன்றாகி மூலத் துருவம் பலவாகி
யுணர்வு முயிரும் பிறிதாகி யூழி

சென்று சறுங்காலத் தந்நிலைய தாகித்
திறத் துலகந் தானுக்ச் செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே யெங்கள்
நவைதீர்க்கு நாயகமே நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி அபற்பேரைக் காய்தி
நிலையில்லாத் தீவினையு நீதந்த தன்றே"

என்று பலவாறு அப்பரம் பொருளை வாயார வாழ்த்தினர். பின்னர், கபீர் தாசர், "அடியேனை உய்விக்க வந்த அண்ணலே, உம்மையே நம்பி உயிர் வாழ்ந்துவரும் கோபன்னனென்னும் சிறந்த பக்தன் ஒருவன், உம்முடைய திரு வழகை நேரிற் கண்டு களிக்க வேண்டுமென விரும்பினான். இன்றைய தினம் பகல் பதினேழு நாழிகைக்கு உமது திருவுருவை அப் பக்தனுக்குக் காட்டுவிப்பதாக அடியேன் வாக்களித்துளேன். எனது வாக்குப் பொய்யா வண்ணம், தேவரீர் கோபன்னனுக்குக் காட்சி கொடுத்து அருளவேண்டும்," என்று இராம பிரானை வணங்கி நின்றார். பக்தர்கள் விரும்பியவற்றை விரும்பிய வண்ணமே அளிக்கும் விமலர், "அன்ப, உனது விருப்பின்படியே கோபன்னன் இன்றைய தினம் எனது உருவைக் காணக் கூடும்" எனக் கூறி மறைந்தார்.

கோபன்னர், இராம சந்திரரின் காட்சி கிடைக்கும் என்ற பேரானந்தத்தால், வீட்டை நன்கு அலங்கரித்தார்; கடவுள் வந்து இருப்பதற்குக் கட்டில் ஒன்றை யிட்டு, அப் பெருமானின் வரவை அன்புடன் எதிர் நோக்கி யிருந்தார். அதே சமயத்தில் அப் பக்தர், அடியவர்களுக்கு அன்னத்தையும் இட்டுக் கொண்டிருந்தார். இவ்வண்ணம் கோபன்னர், இரண்டு தொழிலிலும் கருத்தைச் செலுத்திக் கொண்டிருக்கையில், உயிர்களை உய்விக்கும் உத்தமராகிய

இராம பிரான், எருமையின் உருவைக் கொண்டு சேற்றில் விழுந்து புரண்டு, அன்னம் அருந்திக் கொண்டிருந்த அந்தணர்களின் இடையில் ஓடி, கோபன்னர், கடவுளுக் கென அலங்கரித்து வைத்துள்ள அவ்வழகிய கட்டிலின் மேல் விழுந்து புரண்டார். கடவுளின் கபடத்தை அறி யாத கோபன்னர், எருமையின் செயலைக் கண்டு மனம் பொறுதவராகித் தடிகொண்டு அவ் வெருமையை நன்கு புடைத்துத் துரத்தினர்; 'கடவுளுக் கென்று இட்டிருந்த கட்டிலை, எருமைக் கடா சேறாக்கியதே,' என்று மனம் வருந்தினர். பிறகு, அப் பக்தர், அக் கட்டிலை மறுபடியும் செம்மை செய்து வைத்து, இராம பிரானின் வரவை நோக்கிய வண்ணமாய் இருந்தார்.

தடியால் அடியுண்டு சென்ற இராம சந்திரர், கபீர் தாசருக்குக் காட்சி கொடுத்து நின்றார். நினையாத முன் வந்து தோன்றிய அந் நிமலரைக் கபீர் கண்டு, களிப் பென்னும் கடலில் ஆழ்ந்தார்; அப் பெருமானைப் பலவாறு வந்தித்தார். பின்னர், இராம பிரான், கபீர் தாசரை அன் புடன் நோக்கி, "பக்த, உனது விருப்பின்படியே யான் சென்று, கோபன்னனுக்கு எனது உருவத்தைக் காட் டினேன். அவன் என்னைத் தடிபாற் புடைத்துத் துரத் தினன்," என்று தடியடி கொண்டுள்ள முதுகைக் காட்டி னர். அதனைக் கண்ட கபீர் பெருவியப் புற்றார். 'அப் பக்தன் அவ்விதம் செய்பவன் அல்லனே,' என் றெண்ணித் திகைத்தார். பிறகு, கபீர் தாசர் இராம சந்திரரை நோக்கி, "கருணாகரக் கடவுளே, தாங்கள் எவ் வடிவு கொண்டு, கோபன்னன் முன் தோன்றினீர் ?" என்று வினயத்துடன் வினவினர். "யான் எருமையின் உருவைக் கொண்டு சென்றேன்," என்று கூறினர், பக்தரைப் பரிசோதிக்கும்

அப் பரந்தாமர். அதனைக் கேட்ட கபீர், "மாயன் என்னுந் திருநாமத்தைக் கொண்டுள்ள மாலே, நீவிர், அப் பக்தரை இவ்விதம் சோதிக்கலாமா? அவர் கபட மென்பதைச் சிறிதும் அறியாதவராயிற்றே! இஃது அவர்க்குத் தெரியுமாயின், அப் பக்த சிரோமணி, மதி யிழந்து மண்மிசைச் சாய்வரே!" என்று மிகப் பணிவுடன் கூறி நின்றார். அவ்விதம் உரைத்த கபீர் தாசரை, இராம பிரான் அருளுடன் நோக்கி, "மெய்யன்ப, கோபன்னன் பக்தி யின்னும் முதிர்ச்சியைப் பெறவில்லை. அவன் இப்பொழுது இருக்கும் நிலை மிகத் தாழ்ந்த நிலையே. அப் பக்தன் சில ஆண்டு கழிந்தபின் என்னை நேரிற் கண்டு களிப்பான்," என்றுரைத்து மறைந்தார்.

இராம பிரானது வரவை அன்புடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்த கோபன்னர், மாலையின் இறுதி வரையிலும் அப் பெருமான் வாராமையைக் கண்டு மனந் தளர்ந்தார். 'பக்தர்களுக்கு நாயகராய் விளங்கும் கபீர் தாசரின் வாக்கும் பொய்த்ததே! அடியேன் இனி இராம சந்திரரை எவ்விதம் காண்பேன்!' எனத் தனக்குள்ளே பலவாறாக நினைத்து, அளவிலாத் துயரில் ஆழ்ந்தார். கோபன்னர் இந் நிலையில் இருக்கையில், கபீர் தாசர் அப் பக்தரிடம் வந்தார்.

கபீரைக் கண்ட கோபன்னர், அப் பக்தரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். கோபன்னரின் முகவாட்டத்தைக் கண்ட கபீர் தாசர், ஒன்றும் அறியாதவரைப் போல், அப் பக்தரை நோக்கி, "அன்ப, செந்தாமரை மலரையொத்த வுனது முகம் இவ்வாறு வேறுபட் டிருப்பதற்குக் காரணம் யாது?" என்றார். அதற்குக் கோபன்னர், "இராம சந்திரரைத் தரிசியாத முகம் எவ்விதம் பொலிவுடன் விளங்கும்? உமது வாக்கு ஒருபோதும் பொய்க்காதென

வுறுதியுடன் நம்பி, இராம பிரானின் வரவை அந்திப் பொழுது வரைச்கும் அன்புடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். உமது திரு வாக்கும் பொய்யாயிற்றே! அடியேன் இனி அப் பரந்தாமரைக் காண்பது எங்ஙனம்?" எனக் கண்ணீர் பெருக, மனங் கலங்கிக் கூறினர்.

கபீர் தாசர், கோபன்னர் சொல்லியவற்றை யெல்லாம் மிக்க அமைதியுடன் கேட்டுப் புன்னகை புரிந்தார். பின்னர், அப் பக்த சிரோமணி, கோபன்னரைக் கருணையுடன் நோக்கி, "அன்பிற் சிறந்த அருமைப் பக்த, எருமையின் வடிவத்தோடு வந்து, உனக்குக் காட்சி கொடுத்து, உன்னால் அலங்கரிக்கப்பட்டு வைத்திருந்த கட்டிலின்மேல் அன்புடன் புரண்ட அப் பெருமானைத் தடியினால் அடித்துத் துரத்தியவன் நீ தானே?" என்று வினவினர்.

எருமை வடிவங் கொண்டு வந்தவர் இராம சந்திரரே யென்பதை யுணர்ந்த கோபன்னர், மெய்மறந்து கீழே விழுந்தார். சிறிது நேரஞ் சென்ற பின் தானே எழுந்தார். "பாவியேன், கடவுளென்று உணராது, எருமையின் வடிவத்தைக் கொண்டு வந்த அப் பரம் பொருளைத் தடிகொண்டு அடித்து ஓட்டினேனே! அத்தகைய தீச் செயலைச் செய்த இக் கை அற்று வீழாது இன்னும் இவ்வுடலுடன் பொருந்தி யிருக்கின்றதே! இஃது என்ன விந்தை! இப் பாவத்தை அடியேன் எவ்வாறு ஒழிப்பேன்!" என்று கோபன்னர் கண்ணீர் விட்டுக் கதறினர்.

கடவுளின் திருவடியில் பேரன்பு பூண்டுள்ள கோபன்னரின் சிறந்த பக்தியைக் கண்டு, கபீர் தாசர் பேரானந்தம் அடைந்தார்; பின்னர் கோபன்னருக்குத் தேறுதல் சொல்ல வேண்டு மெனக் கருதி, அப் பக்தனைப் பார்த்து, "ஐய,

வீணே யேன் இவ்வண்ணம் வருந்துகின்றாய்? அறியாமற் செய்யும் வினைகளின் பயன், செய்வோனைப் பற்றுவதில்லை யென நூற்களிற் கூறப்பட்டிருப்பதை அறியாயா? கடந்ததை நினைந்து மனதிற் கவலை கொள்ள வேண்டா; சில நாட்களுக்குள் இராம பிரானைக் கண்ணாரக் கண்டு களிப் படைவாய்," எனப் பல இனிய மொழிகள் கூறிச் சென்றார்.

கோபன்னர், கபீர் தாசரின் வாக்கை உறுதியாக நம்பினார். கடவுளின் தரிசனம் கடிதில் கிடைக்கும் என்பதே அவர் துணிபாயிற்று. இவ்வாறு மனத்திடம் கொண்டு அப் பக்தர் அக மகிழ்ந்தார்; கபீர் தாசரால் உபதேசிக்கப் பெற்ற அத் தாரக மந்திரத்தை இடைவிடாது உச்சரித்து வந்தார்; திருமாலின் அடியவரைக் காணின், அவரே திருமால் எனக் கருதி, அப் பெரியார்க்கு அன்ன மிட்டு ஆனந்த மடைவார். கோபன்னரின் அரிய செயலைக் கண்ட உலகினர் அவரது பெருங் குணங்களைப் புகழ்ந்து வந்தார்.

---

126445
126445

## ஐந்தாம் இயல்.

### கோபன்னர் தாசீல் உத்தியோகம் பெறுதல்.

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு"

என்று திருவள்ளுவர் அருளி யுள்ள குறட் பாவின் பொருளைக் கோபன்னர் பல நூற்களின் வாயிலாக அறிந்துள்ளார் ஆதலால், அப் பக்தர் அடியவர்களுக்கு அன்னமிட்டு ஆநந்திக்கும் அருஞ் செயலிலேயே, தந்தை யீட்டி வைத்த தனத்தை யெல்லாம் செலவிட்டு வந்தார். முடிவில், கோபன்னர், உண்ண உணவும், உடுக்க வுடையு மின்றி, மிகவும் வருந்தி வந்தார். எல்லாப் பிணியிலும், வறுமைப் பிணி மிகவும் கொடியதாகையால், அப் பக்தர் உடலும் உயிரும் அக் கடும் பிணியால் வாட்ட முற்றது. இந் நிலையிலும் அப் பக்த சிரோமணி, கடவுளைக் கணப்பொழுதும் மறவாது காலங் கழித்து வந்தார்.

ஒருவன், செல்வத்திற் சிறந்து விளங்குங் காலையில், நன்னெறியில் ஒழுகுவது புகழத்தக்க தன்று. ஆனால், அவனே, வறுமையால் வாடுங் காலத்தில் தீய நெறியிற் செல்லாது, நன் னெறியிலேயே ஒழுகி வருவானானால், அவனது செய்கை அப்பொழுது எல்லோராலும் புகழப்படும். கோபன்னர், வறுமையிலும் செம்மையாக ஒழுகி வாணாட்களைக் கழித்து வந்தனராதலால், அப் பக்தரைப் புகழ்ந்து பேசாதார் ஒருவரு மிலர்.

ஒரு நாள் இரவு, கோபன்னர் படுக்கைக்குப் போதற்கு முன்னர், வழக்கமே போல் இராம சந்திரரை மனத்தினால் நினைத்து, "அடியவர்களின் அல்லலைப் போக்கும்

ஆதி மூலரே, பக்தர்களைப் பரிசோதிக்கும் பரம புருடரே, அடியேனை வறுமைக் கடலினின்றும் வாரியெடாது சும்மா இருத்தல் உமக்கு அழகாமோ? குசேலரின் வறுமைப் பிணியை அரை நொடியில் போக்கிய அண்ணல் நீரன்றோ? அடியேன் மீது உமது கடைக்கண் பார்வை படும் நாள் என்றோ? அறியேன்," எனப் பல விதமாகத் திருமாலைத் துதித்துத் துயில் கொண்டார்.

பக்தர்களின் துயரைக் காணச் சிறிதும் பொறாத அப் பரந்தாமர், அன்றிரவே, கோபன்னரின் கனவில் தோன்றி, 'அன்ப, உனது துயர் இன்றோடு ஒழிந்தது. நாளைக் காலையில், ஐதராப் பாக்கம் என்னும் அழகிய ஊருக்கு அரசனாய் விளங்கும் தானேஷாவைக் காணுவையேல், அவ் வரசன் உனக்குத் தாசீல் உத்தியோகம் கொடுப்பன். அது கொண்டு நீ சுகமாய் வாழலாம்," என்றுரைத்துச் சென்றார்.

கோபன்னர் வைகறையில் துயிலெழுந்து, இராம பிரான் திருவருளைச் சிறிது நேரம் நினைந்து வியந்தார். 'ஐதராப் பாக்கத்தில் நமக்கு வேண்டியவர் எவராவது உண்டா?' எனச் சிறிது பொழுது ஆலோசித்தார். பின்னர், அவ் வூரில் தானேஷாவினிடம் மந்திரிகளாக அமர்ந்து வேலை பார்த்து வரும், அக்கன்னர் மாதன்னர் என்பவர்களின் நினைவு அப் பக்தருக்கு வந்தது. அம் மந்திரிகள் இருவரும் கோபன்னருக்கு உறவு முறையில் அம்மான்மார்கள் ஆகவேண்டும். உடனே அப் பக்தருக்கு அளவிலாத ஆநந்தம் உண்டாயிற்று.

கோபன்னர், கனவில் கடவுள் தோன்றிக் கூறியதையும், ஐதராப் பாக்கத்துக்குத் தான் போக விரும்புவதையும், மனைவியினிடங் கூறினார். அப் பெண்மணியும் இறை

வனைப் பலவாறு புகழ்ந்து ஏத்தி ஆனந்த முற்றாள். பிறகு, கோபன்னர், ஐதராப் பாக்கத்துக்குச் சென்று, அக்கன்னர், மாதன்னர் என்னும் பெயருடைய இரண்டு சகோதரர்களும் மனம் ஒத்து வசித்து வரும் வீட்டை யடைந்தார். கோபன்னரைக் கண்ட உறவினர், கரை கடந்த களிப்பெய்தினர். 'எப்பொழுதும் வாராதவர் இப்பொழுது நமது வீட்டைத் தேடி வந்ததற்குக் காரணம் யாதோ!' என்று நினைத்தார்; பிறகு, அப் பக்தரின் சுகத்தையும் அவருடைய வாழ்க்கைத் துணைவியின் சுகத்தையும், அவர் அருமைப் புதல்வன் சுந்தரத்தின் சுகத்தையுங் கேட்டார். கோபன்னர் கபட மற்றவராதலால், தன்னுடைய நிலைமையைச் சிறிதும் ஒளியாது கூறி முக வாட்டத்துடன் இருந்தார்.

கோபன்னரின் தாழ்ந்த நிலைமையைக் கேட்ட அக்கன்னர் மாதன்னர் என்னும் இரு சகோதரரும் மிகவும் மனம் வருந்தினர்; பிறகு, கோபன்னருக்குப் பலவிதமான தைரியச் சொற்களைக் கூறினர்; அப் பக்தரை நீராட்டி வைத்தார்; நல்ல ஆடைகளைக் கொடுத்து அணிந்து கொள்ளும்படி கூறினர். அதன் பின், கோபன்னர், அம்மான்மாருடன் அமர்ந்து அறுசுவை உண்டியை அன்புடன் உண்டார். பின்னர், அக்கன்னர், மாதன்னர் என்னும் இரண்டு அமைச்சரும், தானேஷாவின் சபைக்கு வந்து அவ்வரசனைக் காணும்படி கோபன்னருக்குக் கூறி, தங்கள் தொழில் நோக்கிச்சென்றார்.

அம்மான்மார், அரசன் சபைக்குச் சென்ற சிறிது நேரத்திற்குப் பின்னர், கோபன்னர், நல்லாடை யணிந்து, இராம சந்திரரைச் சிறிது பொழுது உள்ளன்புடன் தியா

னித்து விட்டுத் தானேஷாவைக் காணுவதற்குப் புறப் பட்டுச் சென்றார்.

ஐதராப்பாக்கத்து அரசனாகிய தானேஷா என்பவன், அரியணைமீது அமர்ந்து, அறிவிற் சிறந்து விளங்கிய அக் கன்னர், மாதன்னர் என்னும் அமைச்சரை நோக்கினான். அவ்வரசன், குடிகளைக் குழந்தைகள் போல் கருதும் இயல் புடையவனாதலால், அவர்களின் சுகத்தைப் பற்றியே முத லில் அமைச்சர்களைக் கேட்டான்; அதன்பின், அரசாங்கச் சம்பந்தமாகப் பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தான். அக்கன்னர், மாதன்னர் என்னும் அமைச்சர்கள் இருவரும் தானேஷா கேட்டுவந்த கேள்விகளுக்கெல்லாம் தக்கவாறு பதில் அளித்து, அவ்வரசன் மகிழுமாறு செய்தனர். அச் சமயத்தில் கோபன்னர், அரசன் சபையை அணுகி, மண்டி யிட்டுத் தானேஷாவை வணங்கினார். அரசர், வணங்கிய அந்தணரை நோக்கி, "அந்தண, நீ யாவன்? உன் பெயர் யாது? உனது உறைவிடம் எது? நீ இவ்விடம் வந்து என்னைக் காண்பதற்குக் காரணம் என்ன? என்று கேட்டார். அப் பக்தர், தானேஷாவை வணங்கி, "மாநிலங் காக்கும் மன் னரே, அடியேன் நெற்கொண்ட பல்லியென்னும் கிராமத்தில் வசிப்பவன். என் பெயர் கோபன்னன் என்பர்; வறுமை யால் மிகவும் வருந்துகின்றேன். தாங்கள் ஏதாவது ஒரு வேலை தந்திடுவீரானால், அது கொண்டு எனது வாழ்நாளைப் போக்குவேன்," என்று மிகப் பணிவுடன் கூறி நின்றார். கோபன்னரின் அடக்கமும் பணிவுடன் கூடிய இனிய மொழிகளும் தானேஷாவின் மனதைக் கவர்ந்தன. அவ் வரசர் மந்திரிகளை நோக்கி, "அமைச்சர்காள், இவ்வந்தண னுக்குத் தகுந்த தொழில் ஏதாவது இருக்கின்றதா? என்று கேட்டார். கோபன்னரின் அம்மான்மார் சிறிது நேரம்

யோசித்த பிறகு, "அரசரே, இவ் வூரைச் சார்ந்த பத்திராசலம் என்னும் பதியில் தாசில் வேலை ஒன்று காலியாய் இருக்கின்றது. அவ் வேலை இவர்க்குத் தகுந்ததாய் இருக்கும் என்று எண்ணுகிறோம்,'' என்றார்.

தானேஷா, கோபன்னரைப் பார்த்து, "அருமறையாள, பத்திராசலம் என்னும் பதியில் உனக்குத் தாசில் உத்தியோகம் கொடுத்தோம்; அங்குச் சென்று, அப் பதியில் வசிப்பவர்களிடம் பேரன்பைச் செலுத்தி, அவர்கள் செலுத்தும் வரிப் பணத்தை யெல்லாம் ஒன்றுப் சேர்த்துத் தவறாது எனக்கு அனுப்பிவைத்து, உனது வேலையைச் செம்மையாய்ப் பார்த்து வருவாய்'', என்று கூறினார்.

கோபன்னர், தானேஷாவை வணங்கி, சீல் முதலியவைகளைப் பெற்றுக் கொண்டு, சில சேவகருடன் பத்திராசலத்திற்குப் புறப்பட்டார். புறப்பட்டுப் போகும் வழியில், அப் பக்தர் கௌதமி நதியைக் கண்டார். அந் நதி, மிகச் சிறப்புற்று விளங்கும் நதிகளில் ஒன்று ஆதலால், அவர், காவலாளருடன் அப் புண்ணிய நதியில் நீராடி மகிழ்வுற்றார். பிறகு, அவர்கள் அனைவரும் சிறிது தூரஞ் சென்றதும், பத்திராசலச் சிகரத்தைக் கண்டார்.

கோபன்னர், காவலாளரை நோக்கி, "அன்பர்காள், நமது கண்ணுக்குத் தோன்றும் இப் பத்திராசலம் மிக்க மகிமை வாய்ந்தது. இதைக் கலியுக வைகுந்தம் என்பர். நம்பிக்கையுடனும் உள்ளன்புடனும் இம் மலையைச் சுற்றி வருபவர்களின் பிணி முதலியவைகள், சூரியனைக் கண்ட பனியென நீங்கும் என்பர். அத்தகைய சிறப்பு வாய்ந்த அம் மலைக்குச் சென்று, அங்குள்ள ஆண்டவரைத் தரிசித்துச் செல்லுவோம்," என்றார்.

தானேஷாவின் பணியாளர், கோபன்னரின் கருத்திற் கிசைந்து, அப் பக்தருடன் பத்திராசலம் என்னும் அச் சிறந்த மலைமேற் சென்றார். பத்திராசலத்தை அடைந் ததும், கோபன்னருக்கு உண்டாகிய ஆநந்தத்துக்கு அளவே யில்லை. பின்னர், அப் பக்தர், சீதா இலக்குமண பரத சத்ருக்ன அனுமார் சமேதராய் எழுந்தருளியுள்ள இராம சந்திரரைக் கண்டு, அவரது திருவடியில் வீழ்ந்து வணங்கி னார்; அப் பெருமானின் புகழைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடினார்.

பின்னர், கோபன்னர், தானேஷாவின் ஏவலாளருடன் பத்திராசலத்துக் கச்சேரிக்குள் நுழைந்தார்; அவ்வூர்க் குடிகளை வரவழைத்தார். புதிய தாசிலைப் பார்க்க அவ் வூர்க் குடிகள் மிக்க ஆவலுடன் விரைந்து வந்து கச்சேரி யைச் சூழ்ந்து கொண்டனர். அங்ஙனம் திரண்டு வந்த குடி களைக் கோபன்னர் கண்டு களிப் பெய்தினார்.

அப் பக்த சிரோமணி, பத்திராசலக் குடிகளை நோக்கி, "குடிகாள், யான் தானேஷாவால் இப் புண்ணிய பதிக் குத் தாசிலாக நியமிக்கப்பட்டுள்ளேன். இவ் வூரில் உறையும் நீங்கள் அனைவரும் பெருந் தவஞ் செய்துள்ளவர்க ளாகவே இருக்கவேண்டும் என்பது எனது துணிபு. இத்தகைய சிறந்த பதியில் எனக்குத் தாசில் உத்தியோகம் கிடைத் ததைப் பற்றி யான் மிகவும் களிக்கின்றேன். நீங்கள் அரச ருக்குச் செலுத்தவேண்டிய வரிப்பணத்தைத் தகுந்த காலத் திற் செலுத்தக் கடவீர். ஐம்பொறிகளைத் தீய வழியிற் செலுத்தாது, நன்னெறியிற் செலுத்தி, நற்கதி யடைதற் குரிய வழியைத் தேடுங்கள். குற்ற மற்ற வழியில் பொருளை யீட்டி, அறத்தைச் செய்து, அன்னத்தைப் புசியுங்கள். எல்

லாம் வல்ல 'இறைவரை எப்பொழுதும் நினையுங்கள்,'' என அவர்கள் அகம் மகிழும் வண்ணம் நற்போதனை செய்தார். கோபன்னரின் இனிய மொழிகளைக் கேட்ட குடிகள் இன்புற்றனர். இத்தகைய நற்குணமுடைய தாசிலைப் பெற நாம் நற்றவம் செய்திருக்க வேண்டும்,' என்று அவர்கள் தமக்குள்ளே எண்ணினார்கள். பிறகு, குடிகள் அனைவரும் கோபன்னரை வணங்கி விடைபெற்றுச் சென்றார்கள்.

## ஆரும் இயல்.

### மலைமீது கோயிலை மாண்புடன் கட்டுதல்.

கோபன்னர், குடிகள் களிக்கும் வண்ணம் தாசீல் உத்தியோகஞ் செய்து வந்தார். பத்திராசலத்தில் உள்ளவர் அவர்பால் பேரன்பைக் காட்டி வந்தனர். அவ்வுத்தமர், ஒவ்வொரு நாளும் கணக்கற்ற அந்தணர்க்கு அன்ன மிட்டு வந்தார். அவரது அறச் செயலைக் கண்ட அனைவரும் அப் பக்தரைப் பலவாறு புகழ்ந்து வந்தனர். அப் புண்ணிய புருடர், குடிகள் அரசருக்குச் செலுத்தும் வரிப் பணத்தை யெல்லாம் ஒன்ருய்ச் சேர்த்துத் தவருமல் தானேஷாவுக்கு அனுப்பி வந்தார்.

இவ்வாறு பல நாள் சென்றன. ஒருநாள் அரசர் சபையில், அக்கன்னர், மாதன்னர் என்னும் அமைச்சர்கள், தானேஷாவை நோக்கி, "அரசர்கள் ஏறே, பத்திராசலத்திற்குத் தாசிலாகச் சென்றுள்ள கோபன்னனை அவ்வூர்க் குடிகள் மிகவும் புகழ்ந்து பேசுகின்ருர்கள். அவ்வந்தணன், குடிகள் செலுத்தும் வரிப் பணத்தைத் தவருது நமக்குச் செலுத்தி வருகின்ருன்; வரிப் பணத்தைக் குடிகளிடமிருந்து வசூல் செய்வதில் மிகவும் சமர்த்தனைப் போல் காண்கிருன். பத்திராசலத்தில் வசிப்பவர்களுக்குள் உண்டாகும் வழக்குகளை, அம் மறையவன் நடு நிலையில் நின்று இரு திறத்தவரும் மன மகிழுமாறு தீர்ப்பு செய்து வருகின்ருன் எனக் கேளவிப் படுகிருேம். அவ் வேதியனுல் நமது அரசாங்கத்திற்கே பெரும் புகழ் வருமென்று எண்ணுகிருேம்," என்று மிக்க குதூகலத்துடன் கூறினர். மந்திரிகளின் உரையைக் கேட்ட தானேஷா ஆநந்தக் கடலுள்

ஆழ்ந்தான். பின்னர், அவ்வரசன், "நுண்ணறிவுடைய அமைச்சர்காள், கோபன்னன் என்னைக் கண்டபோதே, அவனது அடக்கமும், இனிய சொற்களும் என் மனதைக் கவர்ந்தன. அப்பொழுதே அம் மறையவன் நல்லொழுக்க முடையவனாய் இருத்தல் வேண்டுமென எண்ணினேன். அஃது உண்மையாயிற்று. அவன் நடக்கை எனக்கு அள வில்லாத ஆனந்தத்தை உண்டாக்குகின்றது," என்று மந்திரிகளிடம் கூறி மன மகிழ்ச்சி அடைந்தான்.

கோபன்னர், ஒரு நாள் பத்திராசல மலைக்குச் சென்று இராம பிரானைத் தரிசிக்க விரும்பினார். அப் பக்தருடன் மலைக்குச் செல்வதற்குப் பல அந்தணர் வந்து கூடினர். கோபன்னர், மறையவருடன் கூடி மலைக்குச் சென்றார்; அம் மலையில் எழுந்தருளி யுள்ள இராம சந்திரரை மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களினாலும் முறைப்படி வணங்கித் துதித்தார். பிறகு, அப் பக்தர், அருகில் நின்று கொண்டிருந்த மறையவர்களை நோக்கி, "அந்தணரே, இக் கோயில் எப் புண்ணிய புருடரால் எப்பொழுது கட்டப் பட்டதோ! இப் பொழுது இது மிகவும் கேவலமான நிலையில் இருக்கிறதே! இதைச் சீர்படுத்த முன் வரும் புண்ணியர் ஒருவரும் இலையோ?" என்று மிக்க மனவருத் தத்துடன் கூறினார்.

கோபன்னர் கூறியதைக் கேட்ட ஓர் அந்தணர், "பக்தியிற் சிறந்த பரமரே, இப் புண்ணிய பதியில், தம் மக்காள் என்ற பெயருடைய ஒரு பெண்மணி தன் குமாரத் தியுடன் வாழ்ந்து வந்தாள். அம் மாது இராம பிரா னிடத்தில் பேரன்புடையவள்; கடவுளின் அடியவர்களிடத்து நீங்காத அன்புடையவள்; அறஞ்செய்து வருதலே அவளது

அருந் தொழில்; எப்பொழுதும் நன்னெறியிலேயே நடப்பவள். ஒரு நாள் இரவு, பத்திராசலத்தில் எழுந்தருளியுள்ள இராம பிரான், அம் மாது சிரோமணியின் கனவில் தோன்றி, 'பெண்ணே, யான் இவ்வூர் மலையில் எழுந்தருளியிருக்கின்றேன். இதைப் பலர்க்குந் தெரிவித்து, எனக்குச் சிறு கோயில் ஒன்றைக் கட்டி, என்னை வணங்கிவா. பிறகு, இவ் வூர்க்குத் தாசிலாக என்னுடைய பக்தன் ஒருவன் வருவான். அவன் அக் கோயிலைப் புதுப்பிப்பான்,' என்றுரைத்து மறைந்தார். பொழுது புலர்ந்ததும், தம்மக்காள் என்னும் மாது, கடவுள், கனவில் தோன்றியதை நினைத்து மிகக் களிப்படைந்தாள்; இராம பிரான் கனவிற் கூறியதை அவ் வூர்க் குடிகளுக் கெல்லாம் உரைத்தாள். பிறகு, அம் மாது அவ் வூரிலுள்ள பலருடன் மலையின் மீது ஏறிச் சென்றாள்; அம் மலையில் இராம சந்திரர், சீதா இலக்குமண பரத சத்ருக்ன அநுமார் சமேதராய் ஒரு மரத்தின் அடியில் வீற்றிருப்பதைக் கண்டாள். அம் மாதுக்கு அப்பொழுது உண்டான ஆநந்தத்திற்கு அளவே யில்லை. அப் பெண்மணி, இராம பிரானைப் பன்முறை வணங்கிப் பலவாறு புகழ்ந்து, அவ்வூராருடன் வீடு வந்து சேர்ந்தாள். பின்னர், அம் மடந்தை, அப்பொழுது கிராம அதிகாரியாயிருந்த பத்திர ரெட்டி யென்பவரிட மிருந்து சிறிது பொருளுதவி பெற்று, இராம சந்திரரின் நித்திய பூசையைச் செய்து வந்தாள். அதன் பின் அம் மாது, ஊராரின் உதவியைக் கொண்டும், தான் வைத்திருந்த பொருளைக் கொண்டும், மலைமேல் சிறிய கோயில் ஒன்றைக் கட்டி, இராம பிரானை அதில் எழுந்தருள வைத்தாள்; குடிகளிடஞ் சென்று அவர்கள் அன்புடன் அளிக்கும் பொருளைப் பெற்றுச் செய்ய வேண்டிய உற்சவங்களை யெல்லாம் செவ்

வனே செய்து வந்தாள். சில நாட்களுக்குப் பின் அவ் வுத்தமி உயர் பதம் அடைந்தாள். அம் மடந்தைக்குப் பின் இம் மலையைக் கவனித்தவர் ஒருவரு மில்லை,'' என்று கோபன்னருக்குக் கூறினர்.

மறையவர் கூறியவற்றை யெல்லாங் கேட்ட கோபன்னர், 'பெண்ணாய்ப் பிறந்த ஒருத்தி கடவுளுக்காகக் கடுந் துயரடைந்து கோயிலைக் கட்டி வைத்தனளாமே! நாம் ஆணாய்ப் பிறந்தும் என்ன பயன்? அதுவு மன்றி, இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தைக் கொடுப்பது அறம் ஒன்றே. மக்கள் யாக்கையைக் கரும்பிற்கு உவமை கூறலாம். கரும்பைத் தக்க காலத்தில் ஆலையில் இட்டு ஆட்டி, அதன் சாற்றைக் கொண்டு, திப்பியை எறிந்து விடுவதை நாம் கண்ணாரக் காண்கிறோம். அதுபோலவே, நமது உடம்பாகிய கரும்பினின்றும் அறமாகிய சாற்றினை நாம் பிழிந்து எடுக்க வேண்டும். ஆகையால், இம் மலையின்மீது இராம சந்திரருக்கு அழகிய கோயில் ஒன்றை எவ்விதத்திலாகிலும் கட்டி முடிப்போம்,' என்று தனக்குள்ளே எண்ணினர்.

கோபன்னர் ஆழ்ந்த யோசனையில் இருந்ததை அருகிலிருந்த அந்தணர் உணர்ந்தார். பிறகு, அனைவரும் மலையினின்று கீழே யிறங்கினர். கோபன்னர் குடிகளை யெல்லாம் வரவழைத்தார். பின்னர், அவ் வுத்தமர், எல்லோரையும் பார்த்து, ''அன்புடையீர், இப் பதியின் மலைமீது எழுந் தருளியுள்ள இராம சந்திரருக்கு அழகிய கோயில் ஒன்று கட்டுவிப்பதற்குக் கருதுகின்றேன். அத் திருப் பணிக்கு நீங்கள் அனைவரும் என்னுடன் இருந்து உங்களால் இயன்ற உதவியைப் புரியும்படி வேண்டுகின்றேன்,'' என்றார். இவ் வுயர்ந்த கருத்தைக் கேட்ட மக்கள் அளவிலாத மகிழ்ச்சி

அடைந்தனர். பின்னர், அப் பதியினர், "உண்மைப் பக்தியுடைய உத்தமரே, தங்கள் விருப்பத்தின்படியே, யாங்கள் உமக்கு உதவி புரிவதற்கு மிக்க விருப்ப முடையவராய் இருக்கின்றோம். நீவிர் கொண்டுள்ள எண்ணம் மிகச் சிறந்தது. இத்தகைய சிறந்த கருத்துடைய உமக்கு இறைவர் நீண்ட ஆயுளையும் நிரம்பிய செல்வத்தையும் கொடுக்கும்படி அப் பெருமானை வேண்டுகின்றோம்," என்று கூறிச் சென்றார்.

குடிகளின் சம்மதத்தைப் பெற்ற கோபன்னர் மன மகிழ்ந்தார்; மலையில் கோயிலைக் கட்டுவதற்குச் சிறந்த சிற்பி ஒருவனைத் தேர்ந்தெடுத்தார். அப் பக்தர் அச் சிற்பியுடன் மலைமீது சென்று, இராம சந்திரருக்கு அழகிய கோயில் ஒன்று கட்டுவதற்கும், ஆபரணங்களைச் செய்வதற்கும், பலவகையான வாகனங்களைப் பாங்குடன் இயற்றுவதற்கும் யோசித்தார். அச் சிற்பி எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்து, கோபன்னரை நோக்கி, "பக்தரே, உமது விருப்பின்படி கோயிலையும், ஆபரணங்களையும், வாகனங்களையும் அழகு பெறச் செய்து முடிப்பதற்கு, ஆறு லக்ஷ வராகன் வேண்டும்," என்றான்.

கோபன்னர், கணக்கைக் கேட்டவுடன் கச்சேரிக்குச் சென்றார்; கணக்கு எழுதுவோனைக் கூப்பிட்டார். கணக்கன் வந்து தாசிலை வணங்கி நின்றான். கோபன்னர், "கணக்கப் பிள்ளையே, நமது கஜானாவில் உள்ள பணத்தையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்து, மொத்தத் தொகையை விரைவில் கூறுவாய்," என்றார். கணக்கன், விரைந்து சென்று, கணக்குகளை யெல்லாம் நன்றாய்ப் பார்த்து, தாசிலிடம் வந்து, "ஐயரே, இன்றைய தினக் கையிருப்பு ஆறு லக்ஷ வராகன்," என்றான்.

கணக்கன் கூறியதைக் கேட்ட கோபன்னர் களிப் படைந்தார்; சிற்பியைக் கூப்பிட்டுக் கோயிலை விரைவில் கட்டி முடிக்கும்படி கட்டளையிட்டார். கோபன்னர் தேர்ந் தெடுத்த சிற்பி, வேலையில் மிகவும் சமர்த்தனுதலால், காண்போர் கண்களைக் கவரும்படி, கோயிலை மிக்க வேலைப் பாடுடன் கட்டி முடித்தான். நவரத்தினங்களைக் கொண்டு, இராம பிரானுக்கும், சீதாப் பிராட்டிக்கும், இலக்குமண பரத சத்ருக்னருக்கும், சிறந்த ஆபரணங்கள் செய்யப் பட்டன. உற்சவ காலங்களில், இராம சந்திரர் வீதிவலம் வருவதற்குப் பொன்னினுல் வாகனங்கள் பொலிவு பெற இயற்றப் பட்டன.

கோபன்னரால் கட்டுவிக்கப்பட்ட பத்திராசலக் கோயிலைக் கண்டோர், அதுவே கலியுக வைகுந்தமென்று கழறினர். கோபன்னர் அக் கோயிலால் பெரும் புகழ் அடைந்தார். அப் பக்தர், தானேஷாவுக்கு அனுப்ப வேண்டிய ஆறு லக்ஷ வராகனையும் இராம சந்திரருக்குக் கோயில் கட்டுவித்தலிலேயே செலவழித்தார். கடவுளின் கருணையால் தனக்கு யாதொரு கெடுதியும் வாராது என் பதேஅவரது துணிபு. அப் பக்த சிரோமணி, ஒவ்வொரு நாளும் மலை மீது சென்று இராம பிரானைக் கண்குளிரக் கண்டு வணங்கி ஆநந்தித்து வந்தார்.

---

## ஏழாம் இயல்.

### சிறைச்சாலைத் துன்பம்.

கோபன்னரின் அம்மான்மா ராகிய அக்கன்னர், மாதன்னர் என்பவர் ஒரு நாள் அரசாங்கக் கணக்குகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு வந்தார். அப்பொழுது, பத்திராசாலத்தி னின்றும் வரவேண்டிய ஆறு லக்ஷ வராகன் வாராதிருப்பதை அவ்விரு சகோதரரும் உணர்ந்தனர்; அவ்விதம் வரவேண்டிய பணம் வாராமல் நின்றதற்குக் காரணம் அவர்களுக்கு விளங்கவில்லை. அம் மறையவர் உடனே ஒரு ஏவலாளனை ஒருவருக்குந் தெரியாமல் அழைத்து, "பணியாள, விரைவில் பத்திராசலத்திற்குச் சென்று, அப் பதிக்குத் தாசிலாயுள்ள கோபன்னரைக் கண்டு, உன்னை நாங்கள் அனுப்பியதாகக் கூறி, அவர் தானேஷாவுக்கு அனுப்பவேண்டிய ஆறு லக்ஷ வராகனை இன்று வரை அனுப்பாம லிருப்பதற் குரிய காரணத்தை யறிந்துகொண்டு கடுகி வருவாய்," என்று கட்டளையிட்டு அனுப்பினர்.

அமைச்சர்களின் ஆணையின்படியே அப் பணியாளன், காற்றினும் கடுகிச் சென்று, பத்திராசலத்தை நண்ணினன். பின்னர், கச்சேரிக்குச் சென்று, கோபன்னரைக் கண்டு வணங்கினன். கோபன்னர், அவ் வேலையாளனைப் பார்த்து "ஐய, நீ யாவன்," என்றார். அப் பணியாளன், கோபன்னரை வணங்கி, "மறையவரே, உம்முடைய அம்மான்மா ராகிய அக்கன்னர், மாதன்னர் என்பவர் அடியவனை உம்மிடம் இரகசியமாக அனுப்பி யுளர். யான் தானேஷாவுக்குத் தெரியாமல் இங்கு வந்திருக்கின்றேன். எல்லாத்

தாலுக்காவி னின்றும் வரவேண்டிய இறைப் பணங்கள் வந்து விட்டன. ஆனால், உம்மிட மிருந்து வரவேண்டிய ஆறு லக்ஷ வராகன் தான் இன்று வரையில் அரசருடைய பொக்கிஷத்திற்கு வரவில்லை. அதன் காரணத்தை இரகசிய மாக அறிந்து கொண்டு போவதற்காகத்தான் யான் வந்தேன்," என்றுரைத்து நின்றான்.

கோபன்னர், பணியாளன் பகர்ந்த வற்றை யெல்லாங் கேட்டுச் சிறிது நேரம் ஆழ்ந்த ஆலோசனையில் இருந்தார். பிறகு, அப் பக்தர், அவ் வேலையாளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு பத்திராசல மலைமீது சென்றார்.

கோபன்னர், அமைச்சர்கள் அனுப்பிய பணியாளனைப் பார்த்து, "ஐய, இக் கோயிலின் அழகை நன்றாய்ப் பார்; பொன்னால் இயற்றப்பட்டுள்ள இவ் வாகனங்களைக் காண்; நவரத்தினங்களுடன் கூடி ஒளி வீசுகின்ற இத்தகைய திருவாபரணங்களை எவ்விடத்திலாவது கண்டிருக்கின்றாயா? இவைகளெல்லாம் நம்முடைய அரசராகிய தானேஷாவின் ஆறு லக்ஷ வராகனால் ஆக்கப்பட்டுள்ளன. யான் செய்துள்ள இச் செய்கையால் தானேஷாவின் பூத உடம்பு அழியினும், அவருடைய புகழுடம்பு இவ் வுலகில் நிலைபெற் றிருக்கும்," என்று மன மகிழ்ச்சியுடன் கூறினார்.

பணியாளன், கோபன்னரை நோக்கி, "அறச் செய்கை யுடைய அந்தணரே, நீவிர் செய்துள்ள காரியம் எல்லோ ராலும் புகழத் தக்கதே. எனினும், ஒருவருடைய பணத் தைக் கொண்டு, இவ்விதம் செய்தல் தகுதி யல்லவே! இதை அரசர் உணரின், உமக்கு ஆபத்து நேரிடுமே!" என்று கூறிவிட்டு, அப் பக்தரிடம் விடை பெற்று ஐதராப்பாக் கத்துக்குச் சென்றான்.

தானேஷாவின் அமைச்சர், பணியாளன் மூலமாய்க் கோபன்னரின் செய்கையை அறிந்து, மிக்க விசனத்துடன் இருந்தார்; கோபன்னருக்கு எவ்வகையில் உதவி செய்யக் கூடும் என்பதைப் பற்றி நெடு நேரஞ் சிந்தித்தனர். அவர்களுக்கு அப்பொழுது ஒன்றுந் தோன்ற வில்லை. இவ் விதம் பல நாள் சென்றன. கோபன்னர், தானேஷாவின் பணத்தை யெடுத்துப் பத்திராசலத்தில் சிறந்த கோவில் ஒன்றைக் கட்டினர் என்பது ஊர் முழுவதும் பரவிற்று.

ஒரு நாள், தானேஷா, அரியணைமீது அமர்ந்து பணியாளரைப் பார்த்து, "எல்லா ஊரினின்றும் வர வேண்டிய வரிப் பணங்கள் வந்து விட்டனவா?" என்று கேட்டார்.

அரசனுடைய ஏவலாளர், தானேஷாவை வணங்கி, "மா நிலம் புரக்கும் மன்னரே, பத்திராசலத்தி னின்றும் வரவேண்டிய பணத்தைத் தவிர, மற்றைய ஊர்ப் பணங்களெல்லாம் வந்து விட்டன. பத்திராசலத்தில் தாசிலாக வேலை பார்த்து வரும் கோபன்னன், உமக்குச் சேரவேண்டிய ஆறு லக்ஷ வராகனைக் கொண்டு, சிறிதும் பயமின்றி, அவ்வூர் மலைமீது இராம பிரானுக்குச் சிறந்த கோயில் ஒன்றைக் கட்டி யிருக்கின்ருன்," என்று கூறினர்.

பணியாளர் கூறியதைக் கேட்ட தானேஷா பெரிதும் வியப்படைந்தனர். அவருக்குக் கோபன்னர் மீது அளவு கடந்த கோபம் உண்டாயிற்று. அரசர், உடனே அங்கிருந்த சில மகம்மதிய ஏவலாளரைக் கூப்பிட்டு, "பணியாளர்களே, பத்திராசலத்திற்குக் கடுகிச் சென்று, கோபன்னனிடம் இக் கடிதத்தைக் கொடுங்கள். அவன், நமக்குச் சேரவேண்டிய ஆறு லக்ஷ வராகனைக் கொடுப்பின், அதைப்

பெற்றுக் கொண்டு திரும்புங்கள். இல்லையேல், அவ்வயோக்கியனைக் காவலுடன் கொண்டு வாருங்கள்,'' என்று கடுகடுத்துச் சொன்னார்.

மகம்மதிய பணியாளர், தானேஷாவின் கட்டளைப் படியே கடிதத்தைக் கொண்டு, பத்திராசலத்திற்குச் சென்று, கோபன்னரைக் கண்டு, கடிதத்தை நீட்டினர். கோபன்னர், கடிதத்தைப் படித்து, அதில் எழுதியிருந்ததை அறிந்தார். தானேஷா அனுப்பிய வேலையாளர், மகம்மதியர் ஆகையால், கோபன்னரைப் பலவாறு இழித்துப் பேசினர். பிறகு, அவர்கள், கோபன்னரைப் பார்த்து, ''ஏன் ஐயா மயங்குகின்றாய்? எங்களுடைய அரசருக்குச் சேரவேண்டிய பணத்தைச் செலுத்த முடியுமானால் செலுத்து; இல்லாவிடின் உடனே எங்களுடன் புறப்படு,'' என்று கடுமையான மொழிகளைப் பேசினர்.

கோபன்னர், மகம்மதிய பணியாளருடன் செல்லுவதற்குத் துணிந்தார். பின்னர், அம் மறையவர், கச்சேரியிலிருந்த சில வேலையாட்களை விளித்துத் தான் அரசரிடம் செல்ல, பல்லக்கு கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அதனை யுணர்ந்த அரசரின் காவலாளர், ''கோபன்னா அரசனுடைய பணத்தைச் செலுத்த வழியில்லாத உனக்குப் பல்லக்கு ஒன்றா? எங்களுடன் நட,'' என்று, அப் பக்தரைப் பயமுறுத்திப் பேசினர்.

கோபன்னர், அம் மகம்மதிய பணியாளருடன் ஐதராப்பாக்கத்தை நோக்கி நடந்தார். வழியில் கோபன்னரைப் பார்த்த அநேகர், மனம் வருந்திச் செயலற்று நின்றார். சிலர், 'கோபன்னன் இராஜத் துரோகி; அரசனுடைய பணத்தைக் கொண்டு இவன் எவ்வாறு கோயில்

கட்டுவிக்கலாம்; கடவுள் இவனை இவ்விதம் செய்யும்படி கேட்டனரா?" என்று மனம் போனபடியெல்லாம் பேசினர். கோபன்னர், வழி முழுவதும் தாரக மந்திரத்தையே நாவினால் உரைத்துக் கொண்டும், இராம பிரானுடைய திருவுருவத்தையே மனத்தினால் நினைத்துக் கொண்டும், தானிஷாவின் சபையை நண்ணினர்.

மகம்மதிய காவலாளர், கோபன்னரைக் கொண்டு போய் அக்கன்னர், மாதன்னர் என்னும் அமைச்சர்களிடம் விட்டுச் சென்றார். கோபன்னரைக் கண்ட அம்மான்மார் மிகவும் வருந்தினர். பின்பு, அவ்வமைச்சர், கோபன்னரை நோக்கி, "ஐய, இப்பொழுதும் அரச தண்டனையினின்று நீ தப்பித்துக் கொள்ளுவதற்கு ஒரு வழியுண்டு. ஆனால் நீ எங்கள் சொற்படி ஒன்று செய்யவேண்டும்," என்றார்.

அம்மான்மார் கூறியதைக் கேட்ட கோபன்னர் அளவில்லாத ஆநந்தத்தை யடைந்தார்; கடவுளின் திருவருளை வியந்தார். பின்னர், அப் பக்தர் அமைச்சர்களைப் பார்த்து, "அம்மான்மாரே, நீங்கள் கூறுவது நியாயமாயிருப்பின், உங்களுடைய சொற்படி செய்வதற்குச் சிறிதும் தடையில்லை," என்று பணிவுடன் கூறினர்.

கோபன்னரின் மன நிலையை யறிந்த அக்கன்னர், மாதன்னர் என்னும் இரண்டு சகோதரரும், அவ்வுத்தமரின் முகத்தை நோக்கி, "ஐய, நீ சிறந்த இராம பக்தன் என்று அறிகிறோம். ஆதலால், எமது குலத்தைப் புகழ்ந்து ஒரு கவி பாடுவையானால், நாங்கள் ஆறு லக்ஷ வராகனை அரசருக்குச் செலுத்தி, உன்னை அரசரிடத்தினின்றும் மீட்போம்," என்று கூறினர்.

கோபன்னருக்கு, அமைச்சர்கள் கூறியபடி செய்ய மனமில்லை. ஆதலால், அப் பக்தர், "அமைச்சரே, எல்லாம் வல்ல இறைவனுய் விளங்கும் எம்பெருமானைப் பாடிய நாவால், மற்று எவரையும் பாடேன். எனக்கு என்ன தீங்கு வரினும் வருக," என்று அம்மான்மாருக்குக் கூறி நின்றார்.

அக்கன்னர், மாதன்னர் என்பவர்கட்குக் கோபன்னர் மீது பெருங் கோபம் உண்டாயிற்று. அம் மறையவர், சில ஏவலாளரை நோக்கி, "நீங்கள் இவனைச் சிறையில் அடைத்து, நாளைக் காலையில் அரசருடைய கொலு மண்டபத்திற்கு அழைத்து வாருங்கள்," என்று கட்டளை யிட்டுச் சென்றார்.

அமைச்சர்கள் ஆணையின் படியே கோபன்னர் காவலில் வைக்கப்பட்டார். அப்பொழுது அப் பக்தர், இராம பிரானை நினைந்து, 'கருணைக் கடலாய் விளங்கும் கடவுளே, பக்தரை ஆபத்தினின்றும் காக்கும் ஆதி மூலரே, அடியேனை இந்தத் துன்பத்தி னின்றுங் காப்பாற்றுதல் உமக்கு ஒரு பெரிய காரியமோ?" என்று திருமாலைப் பல வகையில் போற்றித் துயின்றார்.

மறுநாள் காலையில், ஏவலாளர், கோபன்னரை அரசர் கொலுமண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். அப் பக்தர், தானேஷாவைக் கண்டு, மண்டியிட்டு வணங்கி மிகப் பணிவுடன் நின்றார்.

தானேஷா, இராம பக்தரை மிகக் கோபத்துடன் பார்த்து, "கோபன்னு, நீ செய்துள்ள காரியம் மிகவும் நன்று. உன்னை யான் யோக்கியன் என்று எண்ணித்

தாசில் உத்தியோகம் கொடுத்தேன். நீ மிகவும் அயோக்கியன் என்பதை உனது செயல் காட்டுகின்றது. இராஜத்துரோகியா யுள்ள உனது முகத்தைக் காண்பதற்கும் எனக்கு மனம் இல்லை. சிறிதும் பய மின்றி, என்னுடைய பணத்தை நீ எவ்விதம் செலவழிக்கலாம்?" என்றான்.

கோபன்னர், அரசனைப் பார்த்து, "உலகைப் புரக்கும் உத்தமரே, உம்முடைய பணத்தை யான் எனது குடும்ப பாதுகாப்பிற்காகச் செலவழிக்க வில்லை; அல்லது கெட்ட வழியிலும் செலவழிக்க வில்லை; உமக்குப் புகழை உண்டாக்குவதற்காகவே கடவுளின் கோயிலைக் கட்டுவித்தலில் செலவழித்தேன்," என்றார்.

கோபன்னர் கூறிய வார்த்தைகள், அரசன் கோபத்தை அதிகப் படுத்தின. தானேஷாவின் இரு கண்களும் நெருப்புப் பொறிகளெனச் சிவந்தன. பின்னர், அவ்வரசன், "கோபன்ன, ஒருவருடைய பணத்தைக் கொண்டு கோயில் கட்டுவிக்கும்படி உனக்குப் போதித்தவர் யாவர்? என்னுடைய உத்தர வின்றி நீ எவ்விதங் கோயில் கட்டலாம்? என்னைச் சிறிதும் மதியாது நடந்த உனக்குக் கொடிய தண்டனை விதிக்க எண்ணுகின்றேன். நீ உனது கொடுஞ்செயலால் தாசில் உத்தியோகத்தையும் இழந்தாய். இப்பொழுதாகிலும் எனக்குச் சேரவேண்டிய ஆறு லக்ஷ வராகனை எவ்விதத்திலாகிலும் பெற்றுச் செலுத்தக் கடவாய். இல்லையேல், நீ கடுந் தண்டனைக் குள்ளாவாய்," என்று கடூரமாகக் கூறினன்.

கோபன்னர் சிறிது நேரம் ஒன்றும் பேசாது இருந்தார். பிறகு அவர், தானேஷாவின் வெகுண்ட முகத்தை நோக்கி, "குடிகளின் குற்றத்தைப் பொறுத்தருளும்

அரசரே, யான் எனக்குச் சொந்தமான ஊரில் கோயில் கட்டிக் கொள்ள வில்லையே! உம்முடைய ஊரில் உள்ள கோயிலைத்தானே சீர்திருத்தினேன். உமது பணத்தை எனது சுய நன்மைக்காகச் செலவழிக்க வில்லையே. உமது புகழ் உலகில் நீடித்து இருக்கவேண்டு மென்று கருதியே யான் அக்கோயிலைக் கட்டுவித்தேன். இவைகளை யெல்லாம் தாங்கள் ஆழ்ந்து ஆலோசித்து, அடியேனை மன்னித் தருளும்," என்று அரசன் அகம் உருகும்படி கூறினர்.

கோபன்னர் கூறியவற்றை யெல்லாம் தானேஷா சிறிது நேரம் ஆழ்ந்து யோசித்தான். கோபன்னரது செயல் நற் செயல் என்பது அவனுக்கு நன்கு விளங்கிற்று; எனினும், கோபன்னரை இப்பொழுது மன்னித்து விட்டுவிடின், மற்றைய ஊர்த் தாசீல்களும், பணத்தைப் பல வழியில் செலவழித்து விடக்கூடும் என்று எண்ணினன். ஒரு வனுக்குத் தகுந்த தண்டனை விதிப்பின், மற்றையோரும் அரசனுக்குப் பயந்து நடப்பர் என்பதே அவன் துணி பாயிற்று.

ஆதலால், தானேஷா, கோபன்னரைப் பார்த்து, "கோபன்ன, நீ சொல்லும் சாக்குப் போக்குகளுக்கு நான் சம்மதியேன். எனக்குச் சேரவேண்டிய பணத்தை நீ ஏழு நாளைக்குள் செலுத்திவிட வேண்டும்; அவ்விதம் செலுத் தாமற் போனல், கடுந் தண்டனைக் குட்பட்டு காலத்தைக் கழிக்க வேண்டும்," என்று அறைந்து, சில பணியாளரைக் கூவி, கோபன்னரைக் காவலில் வைக்கும்படி கட்டளை யிட்டான்.

தானேஷாவின் பணியாளர்கள் கோபன்னரைச் சிறைச் சாலைக்கு நடத்தினர்கள். வழியில் கோபன்னரைக் கண்ட

பலர், 'அருங்குண முடைய இவ் வந்தணர்க்கும் இவ்வாறு நேர்ந்ததே!' என்று வருந்தினர். அரசன் வேலையாளர் கோபன்னரைச் சிறைச் சாலைக்குள் இட்டுத் தாளும் இட்டனர். சிறைச் சாலைக்கு வெளியே இரண்டு காவலாளர் உருவின கத்தியுடன் உலாவி நின்றனர்.

சிறைச் சாலையில் உள்ள கோபன்னரின் மனம் பெரிதும் வருத்த முற்றது. அப் பக்தர், திருமாலை நினைந்து, 'உயிர்களை யெல்லாம் காக்கும் உத்தமரே, உம்மையே நம்பியிருக்கும் அடியேனது துன்பத்தை நீக்கக் கருதாது, இன்னும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருத்தல் உமக்கு அழகாமோ? ஐவரின் மனைவியாகிய துரௌபதையின் மானத்தைக் காத்தவர் நீரன்றோ? அங்ஙனம் செய்துள்ள தேவரீர், அடியேனது மானத்தைக் காவாதிருத்தல் ஏனோ?" எனப் பல வகையிலும் அப் பரம்பொருளை வேண்டித் துதித்தார்.

கோபன்னர் இவ்வாறு கடவுளைத் துதித்துக் கொண்டிருக்கையில், அரசன் காவலாளர் கால் சேர் அரிசியும் கால் சேர் உப்பும் கொண்டுவந்து அப் பக்தருக்குக் கொடுத்து விட்டுச் சென்றனர்.

கோபன்னர், காவலாளர் கொடுத்த அரிசியை உப்பிட்டுச் சமைத்தார். பிறகு, அப் பக்தர், 'இவ் வன்னத்தையும் நாம் புசிக்கவேண்டும் என்பது கடவுளின் கட்டளை போலும்,' என்று நினைத்துச் சிறிது நேரம் வருந்தினார். பின்னர், அப் பக்த சிரோமணி, சமைத்த சாதத்தை இராமபிரானுக்கு இட்டு, அப் பெருமானைத் திரி சரணங்களாலும் வணங்கினார். கடவுளுக்குப் படைத்த அச் சாதம்

தேவாமிருதம் போல் அப் பக்தர் உண்ணுவதற்கு ஏற்ற அன்ன மாயிற்று. அதைப் புசித்த கோபன்னர் மிக்க ஆநந்த முற்றார்; கடவுளின் கருணையை நினைத்துப் பெரிதும் வியந்தார். அவ் வுத்தமர் இவ்வாறே ஒவ்வொரு நாளும் காவலர் கொடுக்கும் அரிசியைச் சமைத்துக் கடவுளுக்கு முதலில் இட்டுப் பின்பு அவ் வுணவைத் தான் ஆனந்தத்துடன் அருந்தி, இராம பிரானை உள்ளன்போடு தியானித்தும், அப் பெருமாளின் புகழை நாவார வாழ்த்தியும், நாட்களைக் கழித்து வந்தார்.

ஒரு நாள் தானேஷா, சில பணியாளரை அழைத்து, "நீங்கள் சென்று, சிறைச் சாலையில் அடைக்கப்பட்டுள்ள கோபன்னன் எவ்விதம் நாட்களைக் கழித்து வருகிறான் என்பதை அறிந்து வாருங்கள்," என்று கட்டளை யிட்டு அனுப்பினான்.

அரசன் கட்டளையைப் பெற்ற பணியாளர், சிறைச் சாலைக்குச் சென்று கோபன்னனைக் கண்டனர். அப் பொழுது கோபன்னர் மெய்ம் மறந்து, இராம சந்திரரின் பாத கமலத்தில் மனத்தைச் செலுத்தி, அப் பெருமானது திரு நாமத்தையே உரைத்துக் கொண்டிருந்தார். கோபன்னர் இருக்கும் நிலையைப் பணியாளர் கண்டார். பின்னர், அவ் வேலையாளர் அரசனிடஞ் சென்று, "இவ் வுலகத்தைச் செங்கோற் கொண்டு ஆளும் உத்தமரே, நாங்கள் சென்று கோபன்னனைக் கண்டோம். அவ் வந்தணன் இராமனது பெயரையே உரைத்துக் கொண்டு சிறிதும் துன்ப மின்றி மிக்க ஆநந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றான். அம் மறையவனை நாம் எவ்வளவு காலம் சிறையில் வைத்திருப்பினும், நமக்குச் சேரவேண்டிய பணத்தை அவன்

செலுத்தான்,'' என்று அரசனுக்குக் கோபம் உண்டாகும் வண்ணம் கூறினர்.

பணியாளர் கூறியதைக் கேட்ட தானேஷாவுக்குக் கோபன்னர் மீது அளவு கடந்த கோபம் உண்டாயிற்று. உடனே அரசன், சில வேலையாளரை விளித்து, ''நீங்கள் விரைந்து சென்று, கொடியவனுகிய அக் கோபன்னனைச் சிறையினின்றும் வெளிப்படுத்திக் குறடு கொண்டு, அப் பாதகனை நன்ருய்ப் புடையுங்கள்,'' என்று கட்டளையிட்டான்.

தானேஷா அனுப்பிய வேலையாளர், சிறைச் சாலைக்குக் கடுகிச் சென்றனர்; கயிற்றைக் கொண்டு கோபன்னரை நன்ருய்க் கட்டினர்; பின்னர், அப் பக்தரை சிறைச் சாலையினின்றும் வெளியே கொண்டு வந்தனர். கோபன்னர் படுந் துன்பத்தைக் கண்ட அவ் வூரினர், 'கடவுளுக்குங் கண்ணில்லையோ? அடியவர்களுக்குக் கடவுள் அடியவராக இருப்பர் என்று ஆன்ருேர் கூறும் வாக்கும் பொய்யாகின்றதே!' என்றுரைத்து அகம் உருகி நின்ருர்.

தானேஷாவின் கட்டளையைப் பெற்றுள்ள ஏவலாளர், கோபன்னரை அரசன் சபைக்கு அழைத்துச் சென்றனர்; அரசனுக்கு எதிரே யிருந்த ஒரு தூணில் அப் பக்தரைக் கட்டினர்; குறடு கொண்டு அவரை மனஞ் சலிக்கப் புடைத்தனர். கோபன்னர் எல்லாம் வல்ல இறைவராகிய இராம சந்திரரையே திரு வுள்ளத்தில் தியானஞ் செய்து கொண்டிருந்தமையால், அப் பெருமானின் திரு வருளால் அக் கொடியோர் அடித்த அடிகள் அப் பக்த சிரோமணிக்குச் சிறிதும் வருத்தத்தைக் கொடுக்கவில்லை. மறுபடியும் காவலாளர் கோபன்னரைச் சிறைச் சாலையில் இட்டனர்.

சில நாள் சென்றபின், தானேஷா, காவலாளர் மூலமாய், கோபன்னர் கடுந் துன்பத்தை யடைந்தும், செலுத்த வேண்டிய வராகனைச் செலுத்த வில்லை என்பதை உணர்ந்தான். உடனே அரசன் அங்கிருந்த சில வேலையாளரைப் பார்த்து, "நீங்கள் போய்ச் சிறைச் சாலையைக் காவல் புரிபவரைக் கண்டு, கோபன்னனை ஒவ்வொரு நாளும் மூன்று மணி நேரம் முட்களின்மேல் நடப்பிக்கும்படி நான் கட்டளை யிட்டதாகக் கூறிவிட்டு வாருங்கள்," என்றான்.

அரசன் ஆணைப் படியே சில வேலையாளர் சிறைச் சாலைக்குச் சென்று, அங்குக் காவல் புரிபவரைக் கண்டு, அரசன் கட்டளையை அவர்களிடம் கூறிவிட்டுத் திரும்பினர். சிறைச் சாலைக் காவலாளர், அரசன் கட்டளை யிட்ட வண்ணமே, கோபன்னரை முட்களின்மேல் நடக்கும்படி பயமுறுத்தினர். அத் தருணத்தில், அப் பக்த சிரோமணி, 'நரசிங்க உருவங் கொண்ட நாராயணரே, பிரகலாதனைப் பலவித துன்பத்தினின்றுங் காப்பாற்றிய உமக்கு, அடியேனுக்கு நேரிடும் துன்பத்தைப் போக்குதல் ஒரு பெரிய காரியம் ஆமோ?' என அப் பெருமானைத் தியானித்துக் கொண்டே முட்களின்மேல் சிறிதும் வருத்தமின்றி நடந்தார். அதைக் கண்ட காவலாளர் ஆச்சரியமடைந்தனர்.

சில நாட்களுக்குப் பின் தானேஷா, கோபன்னரைக் கூரிய கத்திகளின் மேல் நடப்பிக்கும்படி காவலாளர்க்குக் கட்டளை யிட்டான். அரசன் கட்டளைப் படியே சில காவலாளர், மிக்க கூர்மையான கத்திகளின் மேல் கோபன்னரை நடக்கும்படி பய முறுத்தினார்கள். அக் காலை, அப் பக்தர் இரகு குலோத்தம ராகிய இராம சந்திரரை உள்ளக்

கமலத்தில் நிறுத்தித் தாரக மந்திரத்தை நாவினுல் உரைத்துக் கொண்டே அக் கூர்மையான கத்திகளின் மேல் நடந்தார். அப் பொழுது அக் கத்திகள் பரந்தாமரின் அருளால் பூமிக்குள் புதைந்து விட்டன.

இவ் வாச்சரியமான சம்பவத்தைக் கண்ட காவலர், அரசனிடம் விரைந்து சென்று, நடந்ததைக் கூறினர். அரசன் சிறிது நேரம் ஆழ்ந்த யோசனையில் இருந்தான். பின்னர், அவனுக்குப் பெருங் கோபம் உண்டாயிற்று. அவன், காவலரைப் பார்த்து, "கோபன்னன் பிடரியில் பத்து ஆட்கள் சுமக்க முடியாத பாரத்தை யுடைய எழுகு குண்டை வைத்து, அக் கொடியோனை நமது ஊரை வலம் வரும்படி செய்யுங்கள்," என்று கடுகடுத்துக் கூறினன்.

தானேஷாவின் உத்தரவின் படியே காவலர், சிறைச் சாலையுள் புகுந்து, தரைமிசை அடியற்ற மரம் போல் வீழ்ந்து கிடந்த கோபன்னரைக் கண்டு, அவரை யெழுப்பி, அவர் பிடரியில் பத்து மக்கள் சுமக்கக் கூடாத எழுகு குண்டை வைத்து, ஊரை வலம் வரும்படி அதட்டினர். அப் பொழுது கோபன்னர் கால்கள் நடுங்கின; கண்கள் இருண்டன. அந் நிலையிலும் அப் பக்த சிரோமணி, இராம சந்திரரைத் திரி கரணத்தாலும் வணங்கினர். பக்தர்களின் துன்பத்தைப் போக்கும் அப் பரந்தாமரின் இன்னருளால், கோபன்னர் தலையின் மேல் வைக்கப் பட்ட அக் குண்டு அப் பக்தருக்குச் சிறு கொசுகைப் போல் இருந்தது. அப் பக்தர், விரைவில் ஊரை வலம் வந்து, தலையின்மேல் இருந்த எழுகு குண்டைக் கீழே எறிந்து விட்டுச் சிறைச் சாலைக்குள் புகுந்தார்.

ஐதராப் பாக்கத்துக் குடிகள் எல்லோரும், கோபன்னர் படுந் துயரைக் கண்டு கண்ணீர் விட்டுக் கதறினர். 'அறச்

செயலை யுடைய இவ் வந்தணர்க்கும் இவ்விதம் நேர வேண்டுமோ!' என்றனர் சிலர். 'முற் பிறவியில் இப் மறையவர் யாது செய்தனரோ! அவ் வினையின் பயனைத் தான் இவர் இப்பொழுது நுகர்கின்றார் போலும்,' என்றனர் சிலர். இவ் வண்ணம் அவ் வூரில் உறைபவர் பற்பல விதமாய்ப் பகர்ந்து கொண்டிருந்தனர்.

சில நாட்கள் சென்றபின், தானேஷா, கோபன்னருக்குக் கடுந் தண்டனை விதிக்கின், அவர் எவ் விதத்திலாகிலும் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தி விடுவர் என்ற தப் பெண்ணங் கொண்டு, பணியாளரை நோக்கி, "நீங்கள் நாளைப் பகல் பன்னிரண்டு மணிக்கு அக் கோபன்னனை மணல் திட்டிற்கு அழைத்துக் கொண்டு போய் அவ் விடத்தே அவனை உருட்டுங்கள்," என்று சிறிதும் இரக்க மின்றிக் கட்டளை யிட்டான்.

அரசனுடைய பணியாளர், மன்னவன் கட்டளைப் படியே கோபன்னரை மணல் திட்டிற்குக் கொண்டுபோய், உச்சி வேளையில் அப் பக்தரை ஆங்கே உருட்டி விட்டனர். அப் பக்த சிரோமணி, அச் சமயத்தில் நாராயணன் திருவடியையே நாடி நின்றார். பின்னர், அப் பக்தோத்தமர்

"கரியுன்னி மூலமே யென்ற மட்டிற்
கராவைவதைத் தொருநொடியிற் கரியைக் காத்தாய்
உரிகின்ற துகில்வளரக் கிருஷ்ணு வென்றே
உரைத்தளவிற் றுரௌபதைக்கு மானங் காத்தாய்
அரியெங்கும் உளனென்றோர் பாலன் சொல்ல
அக்கணத்தில் தூணிடை சிங்க மானுப்
எரிகின்ற பெருந்தணலை யவனுக் கன்றே
இமசலமாக் கினையரியே யெம்பி ரானே"

Q2:419
176445

என்று அப் பரந்தாமரின் அருட் செயல்களைக் கூறி, அக முருகி அசைவற்று இருந்தார்.

அரசனுடைய பணியாளர், கோபன்னர் இறந்தார் என்று எண்ணினர்; பிறகு, அப் பக்தரின் அருகிற் சென்று, பெயரிட் டழைத்தனர். அதுவும் கோபன்னருக்குக் கேட்க வில்லை. பின்னர், பணியாளரில் ஒருவன் கோபன்ன ரிடஞ் சென்று, 'ராம, ராம' என்று கூறினான். கோபன்னர் உடனே கண் விழித்துப் பார்த்தார். தானேஷாவின் ஏவலாளர், 'இவன் மா மாயக்காரன்,' என்று கூறினர். பின்பு, அரசரின் பணியாளர், கோபன்னரைச் சிறைச் சாலையில் கொண்டுபோய் விட்டு, அரசனிடஞ் சென்று நடந்ததை நவின்றனர்.

ஒரு நாள் காலையில், கோபன்னர், பற்களைச் சுத்தம் செய்வதற்காகக் கிணற்றுக்குப் போய்த் தண்ணீர் முகந் தார். அப்பொழுது அவ்விடத்தி லிருந்த ஒரு தேள் கொடுக்கினால் அவரை நன்றாய்க் கொட்டி விட்டது. அப் பக்தர் உடனே பெருஞ் சப்த மிட்டுத் துடி துடித்தார். சிறைச் சாலைக்கு வெளியே காவல் புரிந்துகொண்டிருந்த காவலாளர் உள்ளே ஓடிவந்து, கோபன்னரைக் கண்டு, "ஏன் ஐயா, பெருங் குரலிட்டுக் கத்தினீர்?" என்று வின வினர். அப் பக்தர், தேள் கொட்டியதைக் காவலருக்குத் தெரிவித்து விட்டு, இராம சந்திரரைப் பல விதமாகத் துதித் தார். உடனே தேளின் விஷம் இறங்கிவிட்டது. கோபன் னர் பரமானந்தம் அடைந்தார்.

கோபன்னரின் அருகு நின்றுகொண்டிருந்த காவலர், அப் பக்தரின் செய்கையைக் கண்டு பெரிதும் வியந்தார்; கோபன்னர் சிறந்த பக்தராக இருக்கவேண்டும் என்பது

அவர்களுக்கு அப்பொழுது தான் தோன்றிற்று, பின்னர், அக் காவலாளர் கோபன்னரைப் பார்த்து, "பக்தியிற் சிறந்த ஐயரே, அரசரால் உண்டாகும் பொறுக்க முடியாத துன்பங்களை யெல்லாம் நீவிர் எவ்வாறு பொறுத்துக் கொண்டிருக்கிறீர்? அவ்விதம் துன்பங்களை யெல்லாம் பொறுத்துக் கொள்ளுவதற்கு ஏதாவது மந்திரம் உண்டா? இருப்பின், சொல்லும்," என்று அப் பக்த சிரோமணியை வேண்டிக் கேட்டுக் கொண்டனர்.

கோபன்னர், காவலர் கூறியதைக் கேட்டுப் புன்னகை புரிந்தார். பிறகு, அப் பக்தர், காவலாளரை நோக்கி, "மடமையால் கட்டுண்டு கிடக்கும் மாந்தரே, துன்பங்களை யெல்லாம் பொறுத்துக் கொண்டிருப்பதற்கு யான் ஒரு மந்திரத்தையுங் கற்றிலேன். யான் கற்றிருப்பது, சுத்தப் பிரம்மமாய் விளங்கும் இராம சந்திரரின் திருநாமமாகிய தாரக மந்திரம் ஒன்றே. அம் மந்திரத்தின் மகிமையைச் சொல்லுதல் அரிது. இம் மந்திரம் ஒன்றே இரு வினை களையும் அறுத்து, அழிவிலாத பேரின்பத்தை அளிக்க வல்லது. இத்தகைய மந்திரத்தை ஒருவன் கற்பானாயின், அவன் ஒரு வித துன்பத்திற்கும் அஞ்சான்," என்று அவர்கள் மனம் கடவுளை நாடும் வண்ணம் உரைத்தார். அரசன் சட்டளையை மேற்கொண்டு ஒழுகும் காவலர், கோபன்னருக்கு நேர்ந்துள்ள துன்பங்களை நினைத்து, மனம் வருந்திச் சென்றார்.

இவ் வண்ணம் கோபன்னர் தாரக மந்திரமே கதி யென்று அல்லும் பகலும் இராம சந்திரரையே தியானம் செய்து கொண்டு வந்தார். ஒரு நாள் அப் பக்தருக்குச் சூலை நோய் உண்டாயிற்று. அக் கடும் பிணியால் அவர் மிகவும் வருந்தினார். அவ்விதம் அப் பக்தர் வருந்திக்

கொண்டிருக்கும் சமயத்தில், தானேஷாவினிட மிருந்து இரண்டு காவலர் வந்து, கோபன்னரைக் கண்டு, "அடே அரசத் துரோகி, உன்னுடைய சிரசை வாங்கி வரும்படி எங்களுக்கு அரசர் கட்டளை யிட்டுள்ளார்," என்று உருவிய கத்தியுடன் நின்றார். அப்பொழுது அப் பக்த சிரோமணி, பஞ்சவர்க்குத் தூது சென்ற அப் பரமனை நினைந்து,

"ஆகித் தனிக்கோல மானான் அடியவர்காச்
சோதித் திருத்துணில் தோன்றினன்—வேதத்தின்
முன்னின்றான் வேழம் முதலே எனவழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை"

என்று அப் பரம் பொருளின் கருணைச் செயல்களைப் புகழ்ந்து, அப் பெருமாளின் பாதார விந்தத்தில் மனதைச் செலுத்தித் தன்னை மறந்து நின்றார்.

அரசரின் கட்டளையைப் பெற்று வந்த காவலர், அவர் விருப்பின்படியே கோபன்னரை வாள் கொண்டு வெட்டினர். அவ் வெட்டு, இராம சந்திரரின் கருணையால், பூமாலை கொண்டு எறிவதை ஒத்திருந்தது. அதனைக் கண்ட காவலர் மிக்க ஆச்சரிய மடைந்து, தானேஷாவினிடம் விரைந்து சென்று, நடந்ததைக் கூறினர். அதனை யுணர்ந்த அரசனும் வியப்புற்றுச் சிறிது நேரம் ஒன்றுந் தோன்றாது இருந்தான்.

கோபன்னருக்கு நாளுக்கு நாள் துன்பம் மிகுந்து கொண்டே வந்தது. அப் பக்தர், ஒரு நாள் இரவு, படுக்கைக்குச் செல்லுவதற்கு முன்னர், இராம சந்திரரை நினைத்து, 'துருவன் என்னும் சிறுவனது துன்பத்தைப் போக்கி, அவனுக்கு அழியாப் பதத்தை அளித்த அண்ணலே, பொதுவரின் இன்னலை நீக்க, கோவர்த்தன கிரியைக் குடையாகக் கவித்த கோபாலரே, அடியேனது துன்

பத்தைப் போக்காது, சும்மாயிருத்தல் உமக்குச் சரியோ? யான் இன்னும் எத்தனை நாள் தான் இவ் விதமான துன்பங்களை யெல்லாம் அனுபவித்துக் கொண்டிருப்பேன். எனக்கு நேரிடும் இத் துன்பங்களுக் கெல்லாம் காரணம் நீரன்றோ? தானேஷாவின் பணத்தை யான் என்னுடைய குடும்பத்திற்காகச் செலவழிக்க வில்லையே. அங்ஙன மிருக்க, தாங்கள் இவைகளை யெல்லாம் கவனியாது பாராமுகமா யிருத்தல் அழகோ? நாளைக்குள் என்னை இச் சிறைச் சாலையினின்றும் விடுவிக்காமற் போவீரானால், அடியேன் நஞ்சையேனும் உண்டு உயிர் துறத்தல் உண்மை,' என்று மிக்க வருத்தத்துடன் உரைத்தார்.

பின்னர், கோபன்னருக்கு ஓர் எண்ணம் பிறந்தது. அஃதாவது ஆடவரைப் பார்க்கிலும் மகளிர் இளகிய நெஞ்சுடையவர் என்பதே. ஆதலால், அப் பக்த சிரோமணி, சீதாப் பிராட்டியைத் திருவுள்ளத்தில் நினைத்து, 'இலக்குமியின் அவதாரமாய் விளங்கும் அன்னையே, செந்தாமரையில் வீற்றிருக்கும் செழுந் திருவே, மன்மதனைப் பெற்றெடுத்த மங்கையே, உம்முடைய புதல்வனாகிய யான் படுந்துயரை நீ யேனும் நீக்கலாகாதோ? அல்லது உம்முடைய கொழுநராகிய இராம சந்திரரை யாவது எனது துன்பத்தை நீக்கும்படி ஏவலாகாதோ?' என மிக்க வருத்தத்துடன் அவ் வம்மையாரை வேண்டித் துதித்துத் துயின்றார்.

பக்தரைப் பாலரைப் போல் பாவிக்கும் சீதாப் பிராட்டியார் மனம், கோபன்னரின் துதியால் மிக்க இளகிற்று. அவ் வம்மையார், இராம சந்திரரை நோக்கி, ''பிராண நாதரே, நம்முடைய குழந்தை கோபன்னன் அழுகைக் குரல் உமது செவியிற் படவில்லையோ? அப்

பக்தனைச் சிறையினின்றும் விடுவித்து, இன்பம் நுகரும் படி செய்வீர்," என வேண்டிக் கொண்டார். எல்லாம் வல்ல இறைவர், சீதையை நோக்கி, "கண்மணீ, உனது விருப்பின்படியே இப் பொழுதே மாறு வேடத்துடன் சென்று, தானேஷாவிக்குச் செலுத்தவேண்டிய வராகனைச் செலுத்திவிட்டு, நம்முடைய பக்தனைச் சிறையினின்றும் மீட்பது மன்றி, நம்மையே நம்பியுள்ள அவ் வுத்தமனுக்குப் பெரும் புகழ் உண்டாகும்படியும் செய்து விட்டு வரு கிறேன்," என்று கூறினர்.

---

# எட்டாம் இயல்.

## கடவுளின் கருணைச் செயல்.

பக்தரைக் காக்கும் பரம் பொருளாகிய இராம சந்திரர், சீதைக்கு வாக்களித்த வண்ணம், பக்த சிரோமணியாய் விளங்கும் கோபன்னரைச் சிறைச் சாலையினின்றும் விடுவிக்கத் துணிந்தார். அப் பெருமாள், இலக்குமணருடன் கூடி, அவ்விதம் செய்வதற்குத் தக்க வழியைப் பற்றிச் சிந்தித்தார். கடைசியாக ஆறு லக்ஷ வாரகனைத் தானேஷாவுக்குச் செலுத்தியே அப் பக்தரை மீட்க வேண்டுமென்பது இராம பிரானுக்குத் தோன்றிற்று.

இராம சந்திரரும், இலக்குமண பெருமாளும், அரையில் பட்டுச் சல்லடந் தரித்து, ஆடை யாபரணங்களால் தம்மை அலங்கரித்துக் கொண்டனர். பின்னர், இரகு குல திலகராகிய அவ் விருவரும், கோபன்னர் அரசருக்குச் செலுத்த வேண்டிய ஆறு லக்ஷ வாரகனைக் கைக் கொண்டு, தானேஷாவின் அரண்மனை நோக்கிச் சென்றார்.

அரண்மனையின் அந்தப்புரத்தில் அயர்ந்து நித்திரை கொண்டிருந்த தானேஷா, அரிய கனு ஒன்று கண்டு அலறியெழுந்தான்; உடனே மனைவியைத் தட்டி யெழுப்பினான். பின்னர், அவ் வரசன், தன்னுடைய காதலியை நோக்கி, "என் ஆருயிரே, அழகிற் சிறந்த இரண்டு சேவகர் என்னிடம் வந்து, கோபன்னன் செலுத்த வேண்டிய ஆறு லக்ஷ வாரகனைச் செலுத்தி விட்டு, என்னிடமிருந்து விடுதலைப் பத்திரம் ஒன்றை வாங்கிச் சென்றார். அவ் விருவரின் அழகு எனது கண்களின் ஒளியை மழுங்கச் செய்தது. அவ் வழகிய சேவகர் பல் வகையிலும் இராம பிரானையும்

இலக்குமண பிரானையும் ஒத்து விளங்கினர். கடைசி யாமத்தில் காணும் சனுக்கள் பலிக்கும் எனப் பலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஆதலால், யான் இப்பொழுது கண்டுள்ள அற்புதக் கனவு ஒருகால் பலித்தாலும் பலிக்கலாம்," என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, கதவைத் தட்டும் ஒலி அவன் காதிற் பட்டது.

தானேஷா விரைந்து சென்று கதவைத் திறந்தான். கனவில் வந்த சேவகர், பண மூட்டையைக் கைபிற் கொண்டு நின்றார். அச் சேவகரைக் கண்ட அரசன் அளவிலாத ஆநந்த முற்றான்; சிறிது நேரம் அவர்களிடம் இன்னது பேசுவது என்பது தெரியாது திகைத்து நின்றான். பின்னர்,

அரசன்.—நீங்கள் யார்? எவ்விடத்தினின்றும் இங்கு வந்தீர்கள்?

இராமர்.—நாங்கள் சேவகத் தொழில் புரிபவர். எமது ஊர் கோதாவரி நதிக்குச் சமீபத்தி லிருக்கும் பத்திராசலம்.

அரசன்.—நீவிர் எவருடைய சேவகர்? உம்மை இங்கு அனுப்பியவர் யாவர்?

இராமர்.—நாம் இராம தாசரின் சேகவர்; அப் பக்தர் அனுப்ப வந்துளோம்.

அரசன்.—நீவீர் எக் குலத்தில் உதித்தவர்? எந்த முறையை யுடையவர்?

இராமர்.—நமது குலம் சூரிய குலம். இவர் எனக்குத் தம்பி யாவர்.

அரசன்.—உமது பெயர் என்ன? உம்முடைய மதம் யாது?

இராமர்.—என்னுடைய பெயர் ராமோஜி என்பர். என் தம்பியின் பெயர் லட்சுமோஜி என்பர். நாம் இராமனுசர் மதத்தைப் பின்பற்றிச் செல்வோம்.

அரசன்.—நீங்கள் எவ்வளவு காலமாக இராம தாசரிடம் வேலை செய்து வருகின்றீர்கள்?

இராமர்.—நாங்கள் மூன்று தலைமுறையாக அப் பக்தரிடம் வேலை பார்த்து வருகிறோம்.

அரசன்.—அவர் உமக்குக் கொடுக்கும் சம்பளம் எவ்வளவு?

இராமர்.—சம்பளத்தைப் பெற்றுத் தொழில் புரிவதற்கு எமக்கு விருப்பமில்லை யாகையால், அப் பக்தர் அன்புடன் இடும் அன்னத்தைப் புசித்தே, யாங்கள் அவரிடம் வேலையைச் செய்து வருகிறோம்.

அரசன்.—இராம தாசர் உம்மை இங்கு ஏன் அனுப்பினர்?

இராமர்.—அவர் உமக்குச் செலுத்த வேண்டிய ஆறு லக்ஷ வராகனைச் செலுத்தி வரும்படி கட்டளையிட்டு அனுப்பினர்.

அரசன்.—ஆனால், சரி. வராகன்களை என் முன்னர் வையும்.

இராமர்.—இவைகளை யெடுத்துக் கொண்டு ரசீது ஒன்று கொடும்.

இராம இலச்குமணர் செலுத்திய வராகன்களைக் கண்டு தானேஷா பெரிதும் வியந்தார்; அச் சேவகருக்குப் பல வகையான மரியாதைகள் செய்ய விரும்பினர். இராம பிரான், தானேஷாவினிட மிருந்து ரசீது பெற்றுக் கொண்டு தம்பியுடன் மறைந் தருளினர்.

பின்னர், இரகு குலோத்தம ராகிய அவ் விருவரும், இராம தாசரை அடைத்து வைத்துள்ள சிறைச் சாலையை அடைந்தார்; அங்கு மண்மீது உறங்கிக் கொண்டிருந்த பக்தரைக் கண்டார். இராம தாசர் இருந்த கோலத்தைக் கண்ட இராம பிரான் மனம் அனல் கண்ட மெழு கென உருகிற்று. அப் பக்தரின் மேனி புழுதியால் மூடப் பெற்றிருந்தது; கைகளிலும் கால்களிலும் வளர்ந்திருந்த நகங்கள் பார்ப்பவர்க்குப் பயத்தைக் கொடுக்கும் வண்ண மாய் விளங்கின. அவ் வுத்தமரின் தலை மயிர், கடந்த ஞானிகளின் சடையைப் போல் முறுக்குற்று விளங்கிற்று. இவ்வித கோலத்துடன் அருகில் ஒரு கிண்ணத்தில் விஷத்தை வைத்துக் கொண்டு அயர்ந்து நித்திரை செய்து கொண்டி ருந்த இராம தாசரின் நிலை மிக்க விசனிக்கத் தக்கதா யிருந்தது.

அக் காலை, இராம சந்திரர், இளைய பெருமாளைப் பார்த்து, ''இலக்குமண, இராம தாசர் அருகிலுள்ள கிண் ணத்தைக் கவிழ்த்து விட்டு, இந்த ரசீதை அவர் பக்கத்தில் வைத்து விட்டு வருவாய்,'' என்று கட்டளை யிட்டார். இலக் குமணர் அவ்வாறே சென்று, கிண்ணத்தில் இராம தாசர் வைத்திருந்த விஷத்தை மண்ணில் இட்டு, தானேஷா கொடுத்த ரசீதை அப் பக்தர் பக்கத்தில் வைத்து விட்டு வந்தார். பிறகு, இராம பிரான் இலக்குமணருடன் மறைந் தருளினர்.

## ஒன்பதாம் இயல்.

### பழம்பிறப்பைப் பகர்தல்.

உலகிற் கெல்லாம் அன்னையாய் விளங்கும் சீதாப் பிராட்டியார், இன்னுயிர்த் தலைவராய் விளங்கும் இராம சந்திரரை நோக்கி, "பிராணபதி, நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் எனக்குப் பெரு வியப்பைத் தருகின்றது. வஞ்சகர் என்னும் பெயர் உமக்கே பொருந்தும். நம்முடைய அருமைப் பக்தனாகிய இராம தாசனைச் சிறையினின்றும் விடுவிப்பதாக என்னிடம் கூறிவிட்டுச் சென்ற நீர், அப் பக்தனுக்குக் காட்சி கொடாது, ஈனப் பிறப்பினனாகிய தானேஷாவுக்குக் காட்சி கொடுத்துத் திரும்பியதின் காரணம் யாது? இவ்விதம் செய்வது உமக்கு அழகாமோ? என்று மிகவும் வருத்தத்துடன் கூறினார்.

சீதாப் பிராட்டியின் இனிய மொழியைக் கேட்ட இராம சந்திரர் புன்னகை புரிந்தார். பிறகு, அப் பரமர், அருமைக் காதலியாகிய சீதையை நோக்கி, "கண்மணி, எனது செய்கையை ஆழ்ந்து நோக்குபவர், என்னை வஞ்சகன் என்று சொல்லுவதற்குச் சிறிதும் துணியார். ஐதராப் பாக்கத்து அரசன், முற் பிறவியில் அரனை அன்புடன் வழிபட்டு வணங்கினவன். அவன் சரித்திரத்தைச் சொல்லுகிறேன். கவனமாய்க் கேள்," என்றார்.

சீதாப் பிராட்டியார், இராம சந்திரர் வாக்கைக் கேட்பதில் மிக்க விருப்ப முடையவ ராதலால், தானேஷாவின் பழைய சரித்திரத்தைச் சொல்லும்படி அப் பெருமானை வேண்டிக் கொண்டார்.

இராம பிரான், சீதையை நோக்கி, "காதலி, கங்கை நதிக்கு வடக்கே ஒரு சிறிய கிராமம் உளது. அதில் அந்தணர் பலர் வசித்து வந்தனர். ஒரு நாள் அங்குள்ள சில அந்தணர் ஒன்றாய்க் கூடி வேதங்களை ஓதிக்கொண்டு இருந்தார். அவர்களுள் ஒருவர், மற்றையோரைப் பார்த்து, 'அறிவிற் சிறந்த அந்தணரே, மறையவன் ஒருவன் ஒவ்வொரு நாளும் ஆயிரங் குடம் கெங்கை நீர் கொண்டு சிவபெருமானை ஆட்டுவித்து அப் பெருமானை அன்புடன் வணங்கி, அவ்வாறே தொண்ணூறு நாட்களைக் கழிப்பானாயின் அவ் வுத்தமன் தேவேந்திரப் பதவியைப் பெறுவான்,' என்றுரைத்தார்.

இந்திரப் பதவியைப் பெறக் கருதிய ஓர் அந்தணன் எழுந்து, அங்ஙனம் கூறிய அந்தணரைப் பார்த்து, 'வேதியரே, யான் நீர் கூறிய வண்ணமே செய்து அப் பதவியைப் பெறுகின்றேன்,' என்றுரைத்துச் சென்றான்.

பிறகு, அவ் வந்தணன் அவ் வூரிலுள்ள சிவன் கோயிலுக்குச் சென்று, நாள்தோறும் ஆயிரங் குடம் கெங்கை நீர் கொண்டு, சிவபிரானை ஆட்டுவித்து, உள்ளன்புடன் வணங்கி வந்தான். இவ் வண்ணம் எண்பத்தொன்பது நாட்கள் கழிந்தன.

பொறுமையுடையவன் பெருமையடைவன் என்பதை அம் மறையவன் உணர்ந்திலன். ஆகையால் அவ் வந்தணன் தொண்ணூறும் நாள், வழக்கப்படி சிவபிரானை வணங்கித் துதியாது, 'நாம் மனஞ் சலியாது எண்பத்தொன்பது நாளும் முறைப்படிச் சிவபிரானை வணங்கி வந்தோம். அக் கடவுள் இது வரைக்கும் நமக்கு ஒரு பலனையும் கொடுக்கவில்லை. அப்படியிருக்க, இன்றைய தினம் நாம் ஏன் அவரை வணங்கவேண்டும்.' என்று நினைத்தான். பின்னர், அம்

மறையவன், கையிலிருந்த குடத்தைச் சிவ பெருமான் தலையிற் போட்டு உடைத்து, 'இங்குக் கடவுள் இல்லை,' என்று கூறி நின்றான்.

எள்ளுக்குள் எண்ணெய் போல் எங்கும் நிறைந்துள்ள அப் பரமர், உடனே பார்வதி சமேதராய், அம் மறையன் முன் தோன்றினர். கடவுளைக் கண்ணாரக் கண்ட அந்தணன் அடியற்ற மரம்போல் அப் பெருமானின் பாத கமலத்தில் வீழ்ந்தான்; பின்னர் எழுந்து, கரங்களைச் சிரமேற் கூப்பி, 'உயிர்களுக் கெல்லாம் தந்தையாய் விளங்கும் உத்தமரே, குழந்தைகள் செய்யுங் குற்றங்களைத் தந்தையர் பொறுத் தருளுதல் போல், அடியேன் அறியாமையினால் செய்துள்ள குற்றத்தைப் பொறுத்தருளும்,' என்று மிகப் பணிவுடன் வணங்கி நின்றான்.

மன மொழி மெய்களால் வணங்கி நின்ற அந்தணன் மேல் உண்டான சிவபிரானது கோபம் சிறிது தணிந்தது. பின்னர், அப் பரமர், மறையவனை நோக்கி, 'அறிவில்லாத அந்தண, அவசரப்பட்டுக் கிடைத்தற் கரிய இந்திரப் பதவியை யிழந்தனையே. நீ பொறுமை யில்லாது என் சென்னியில் குடத்தைப் போட்டு உடைத்ததனால், தமோ குணத்தை யுடைய ஈனப் பிறப்பை யடைந்து, ஐதராப் பாக்கத்துக்கு அரசனாய் விளங்கி, அவ் வூரை யாண்டு வருவாய். அப்பொழுது இராம பிரான், இலக்குமணருடன் வந்து காட்சி கொடுத்துச் செல்வர். அதன் பின்னர் எனது பூரணக் கிருபையைப் பெறுவாய்,' என்றுரைத்து மறைந் தருளினர். அவ் வந்தணன் தான் இப்பொழுது தானே ஷாவாய் விளங்குபவன்,'' என்றார்.

தானேஷாவின் முற் பிறப்பைக் கேட்ட சீதாப் பிராட்டியார், இராம தாசரின் முற் பிறப்பையும் கேட்க

விரும்பினார். ஆதலால், அவ்வம்மையார், இராம சந்திரரை நோக்கி, "ஆருயிர்க் காதலரே, இராம தாசரின் முற் பிறப்பையும் சொல்லி யருளவேண்டும்," எனக் கேட்டுக் கொண்டார். நாயகியின் மனம் கோணு வண்ணம் நடக்கும் அவ் வுத்தமர், இராம தாசரின் முற் பிறப்பைச் சொல்லத் தொடங்கினார்.

"இராமதாசர், முற் பிறவியில் அந்தணர் குலத்தில் அவதரித்தவர்; நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து நடந்தவர்; வேதங்களை யோதியே காலத்தைக் கழித்தவர். இறைவனை இறைப் பொழுதும் மறவாதிருந்தவர். இத் தகைய நற்குணங்களெல்லாம் வாய்க்கப் பெற்ற அம் மறையவர் கிளி ஒன்றை வளர்க்கத் துணிந்தார். உறவினருடன் உவந்து விளையாடும் கிளியைக் கூட்டில் அடைத்து வளர்த்தல் பாதகம் என்பதை அவ் வந்தணர் உணரவில்லை. ஆகையால், அவ்வேதியர், ஓர் அழகிய கிளியைக் கொண்டு வந்து ஒரு கூட்டில் அடைத்து வைத்து, அப் பறவையை மிக்க அன்புடன் வளர்த்து வந்தார். அம் மறையவர், தான் வளர்த்து வரும் கிளிக்கு ராம நாமத்தைக் கற்பித்து வந்தார். அக் கிளி, ராம நாமத்தை உரைக்குங் கால், இராம தாசர் பரமானந்தம் அடைவர். முற் பிறவியிலேயே அவ் வுத்தமர், என்பால் மிக்க அன்புடையவராய் இருந்ததால் தான் இப் பிறவியில் என்னுடைய பக்தராய் அவதரித்திருக்கின்றார். அப் பக்தர் முற் பிறவியில் கிளி ஒன்றைக் கூட்டில் அடைத்து வைத்ததின் பயனாக இப் பிறவியில் சிறைச் சாலையில் இருந்து வருந்தினார். இனி மேல் அப் பக்த சிரோமணிக்கு ஒருவித துன்பமும் இல்லை," என்று இராம சந்திரர், இராம தாசரின் முற் பிறவியைச் சீதாப் பிராட்டியாருக்குக் கூறி, அவ் வம்மையார் மனமகிழும்படி செய்தார். உலக மாதாவாய் விளங்கும் சீதாப் பிராட்டியார் இராம பிரானின் நடு நிலைமையை யுடைய செயலை வியந்து பேரானந்த மடைந்தார்.

## பத்தாம் இயல்.

### அரசரும் பக்தர்க்கு அடிபணிந்து நிற்றல்.

வைகறையில் இராம தாசர் தூக்கத்தினின்றும் எழுந்தார்; எழுந்த வுடனே அருகிலிருந்த கிண்ணத்தைப் பார்த்தார். கிண்ணம் கவிழ்க்கப் பெற்றிருந்தது. அதி லிருந்த விஷம் மண்ணுடன் கலக்கப் பெற்றிருந்தது. அவ் வதிசயச் செயலைக் கண்ட இராமதாசருக்குச் சிறிது நேரம் ஒன்றும் புலப்படவில்லை. பிறகு, அப் பக்தர், "நாம் கிண்ண த்தி லிட்டு வைத்திருந்த விஷத்தை மண்ணிலிட்டுச் சென்ற வர் யாவர்? இச் சிறைச் சாலையின் கதவும் தாளிடப் பெற்றிருக்கின்றதே! நமக்கு நன்மையைச் செய்ய வேண்டு மென்ற உள்ளன் புடையவர் இவ் விடத்தில் ஒருவரு மிலரே! இஃது இறைவனுடைய திருவிளையாடலோ!" என்று பலபல விதமாக யோசித்தார். பின்னர், அப் பக்த சிரோமணி, ரசீது ஒன்று அங்கு இருக்கக் கண்டார். அதில் தானேஷாவின் கை யெழுத்தும் இருந்தது. அதனைக் கண்ட இராம தாசர் சுரை கடைந்த களிப் பெய்தினர். இவையெல்லாம் இராம சந்திரரின் திருவருளே யென் பதை அப் பக்தர் திண்ணமாய் உணர்ந்தார். பின்னர், இராம தாசர், இறைவனை நினைத்து, "அடியவர்களின் ஆபத்தைப் போக்கும் ஆதி மூலமே, நம்பினோர்க்கு நன் மையே செய்யும் நரசிம்மமே, அன்பர்க்கு அருள் புரியும் ஐயரே, இத்துணை நாள் அடியேன் மீது கருணை வையா திருந்தது! யாது கருதியோ!" என, அப் பெருமானை மன மொழி மெய்களால் வழுத்தினர்.

ஐதராப் பாக்கத்து அரசனாகிய தானேஷா, கோடி சூரியப் பிரகாசத்துடன் தன் முன் தோன்றிய சேவகர்

இருவரும் மறைந்ததும், வந்தவர் இராம இலக்குமணரே யென்று உணர்ந்தான். கடவுளெனக் கருதி அவ்விருவரையும் வணங்காமலிருந்ததைப் பற்றி அவ்வரசன் மிகவும் துக்கித்தான்; இராம தாசரைப் பல விதமாகத் துன்புறுத்தியதை நினைந்து மனம் வருந்தினான். இராம தாசர் சிறந்த பக்தர் என்பதை அரசன் இப்பொழுது தான் உணர்ந்தான்.

தானேஷா, மறுநாட் காலையில், கொலுமண்டபத்தில் வந்து அமர்ந்தான். பிறகு, அவ்வரசன், அமைச்சர்களாகிய அக்கன்னர், மாதன்னர் என்பவர்களைப் பார்த்து, "அறிவிற் சிறந்த அமைச்சரே, இராம தாசரைச் சாதாரண மனிதர் என்று நினைத்து, அப் பக்தருக்குப் பல துன்பங்களை விளைவித்தேன். அவர், பக்தியிற் சிறந்த பரமர். இராம சந்திரரே அவருக்குப் பணிவிடை செய்து வருகின்றாரெனின், அவருடைய பெருமையை யான் என்னவென் றுரைப்பேன். நேற்றிரவு, இராம இலக்குமணர் இருவரும் சேவகர் உருக்கொண்டு வந்து, எனக்குக் காட்சி கொடுத்தது மன்றி, இராம தாசர் செலுத்த வேண்டிய ஆறு லக்ஷ வராகன்களையும் செலுத்தி விட்டு, ரசீது ஒன்று பெற்றுச் சென்றனர். பாவியேன் அவரைத் தேவரென உணராது, வணங்காமலும் நின்றேன். நீங்கள் விரைந்து சென்று, இராம தாசரை முத்துப் பல்லக்கில் ஏற்றி, ஊர்வலம் வருவித்துச் சீக்கிரம் இங்கு அழைத்து வாருங்கள்," என்று கட்டளை யிட்டு அனுப்பினான்.

அரசன் கட்டளையை மேற்கொண்ட அக்கன்னர், மாதன்னர் என்பவர், காற்றினுங் கடுகிச் சென்று, இராம தாசர் இருக்கும் சிறைச் சாலையை நண்ணினர்; பின்னர், சிறைச் சாலையுள் புகுந்தார்; அங்கு இராமத் தியானம்

செய்து கொண்டிருந்த இராம தாசரைக் கண்டு அப் பக்தரின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர். அரசரின் அமைச்சரது செயலைக் கண்ட இராம தாசர் வியந்து நின்றார். பிறகு, அம்மான்மாராகிய அவ் வந்தணர், கடவுள் அரசனுக்குக் காட்சி கொடுத்து வராகன்களைச் செலுத்தி விட்டுச் சென்றதைக் கூறினர்; பின்னர், கோபன்னரை நீராட்டி வைத்தனர்; அப் பக்தருக்குச் சிறந்த பட்டாடைகளைக் கொடுத்து அணிந்து கொள்ளும்படி வேண்டினர். பிறகு, அரசனுடைய அமைச்சர் இராம தாசரை முத்துப் பல்லக்கில் ஏற்றி, ஊர்வலம் வருவித்தனர். இராம தாசருக்கு வந்த பெருமையைக் கண்ட அவ்வூர்க் குடிகள் அளவிலாத ஆனந்த மடைந்தனர். அப் பக்த சிரோமணி, ஊர்வலம் வந்து அரசன் கொலு மண்டபத்தை யடைந்தார்.

இராம தாசரின் திருமுகத்தைக் கண்ட அரசன் பரமானந்தம் அடைந்தான்; அப் பக்தரைக் கண்ட வுடனே இரு கரங்களையும் சிரமேற் கூப்பி வணங்கினன். இராம தாசரும் அரசனை வணங்கினர்.

தானேஷா, இராம தாசரை நோக்கி, "பக்தியிற் சிறந்த உத்தமரே, யான் உமக்கு இழைத்துள்ள துன்பங்களை யெல்லாம் மறந்து, என்னை மன்னித் தருளவேண்டும். உமது புண்ணியத்தால் யான் கடவுளைக் கண்ணாரக் கண்டேன்," என்று பணிவுடன் கூறினன்.

இராம தாசர், அரசனைப் பார்த்து, "உலகைக் காக்கும் உத்தமரே, என்னைக் காட்டிலும் நீரே புண்ணியர். கடவுளைக் கண்ணாரக் காணுகின்ற பாக்கியம் யாவர்க்குக்

கிடைக்கும்? இதனாலேயே நீர் மிக்க புண்ணியம் செய்துள்ளவர் என்பது நன்கு விளங்குகின்றது," என்றார்.

தானேஷா, இராம தாசரின் அடக்கத்தையும் ஒழுக்கத்தையுங் கண்டு அக மகிழ்ந்தான். பின்னும் அரசன், அப் பக்தரைப் பார்த்து, "உம்மா லன்றோ, கடந்த ஞானிகளும் காண்பதற் கரிய அப் பரந்தாமர், அடியேன் முன் வந்து தோன்றினர். ஆகையால், என்னைக் காட்டிலும் நீரே மிகுந்த புண்ணியம் செய்துள்ள உத்தமர். உமது பெருமை தெரியாது, உம்மைப் பலவாறாக இகழ்ந்து பேசினேன். அவ்விதம் அடியேன் செய்துள்ள குற்றங்களைப் பொருட் படுத்தாது மன்னித்தருளும். இனி, நீரே பத்திராசலத்திற்குத் தாசிலாக இருந்து, அவ்வூர்க் குடிகள் செலுத்தும் இறைப் பணத்தைக் கடவுள் பொருட்டும், அவருடைய மெய்யன்பர் பொருட்டும் செல வழித்துச் சுகமாக நீண்ட நாள் வாழ்ந்திரும்," என்று கூறி, இராம சந்திரர் கொண்டுவந்து கொடுத்த ஆறு லக்ஷ வராகனையும் இராம தாசருக்கே கொடுத்து, அவருடன் சில மெய்க் காவலரை வழித் துணைக்காக அனுப்பினன்.

---

## பதினோராம் இயல்.

### இராம தாசர் பரமபதம் செல்லுதல்.

இராம தாசர், கடவுளின் கருணைச் செயலை வியந்து, அப் பெருமானைப் பன்முறை வணங்கித் துதித்து, சில மெய்க் காவலர் புடை சூழ்ந்து வர, பத்திராசலம் நோக்கிச் சென்றார். நடு வழியில் சில கள்ளர் வந்து, இராம தாசரையும் மற்று முள்ளோரையும் வழிமறித்து நின்றார்.

கள்ளர் நடுவில் சிக்குண்ட அப் பக்தர், சிறிது நேரம் மனங் கலங்கி மரம்போல் நின்றார். பின்னர், அவ் வந்தணர் எல்லாம் வல்ல இறைவனை நினைத்து, "கள்ளர்க்குக் கள்ளர் போல் விளங்கும் கருணாகரக் கடவுளே, உடனே அடியேனை வந்து காப்பாற்றும்," எனத் துதித்து நின்றார்.

அன்பர்க்கு அருள் புரிவதையே அருந் தொழிலாகக் கொண்டுள்ள இராம சந்திரர், உடனே பல போர் வீரர்களின் உருக் கொண்டு, இராம தாசர் பக்கத்தில் வந்து நின்று, தன்னுடைய மாயையால் வெடீல் ஒன்று உண்டாக்கினார். அவ் வொலியைக் கேட்ட கள்ளர், மின்னலைப் போல் மறைந்தார்.

கள்ளர் மறைந்ததும் கடவுளும் மறைந்தருளினார். ஆபத்தில் வந்து உதவி செய்தவர் இராம சந்திரரே என்று இராம தாசர் உணர்ந்தார். அப் பக்தர், உவப் பெனும் பெருங் கடலுள் ஆழ்ந்தார்; தன்னுடன் துணையாக வந்த மெய்க் காவலர்க்கு இராம பிரானின் கருணைத் திறத்தை யெடுத்துப் புகட்டினார்.

இவ் வண்ணம் இராம தாசர், துணையாக வந்த மெய்க் காவலர்க்கு இறைவரின் பெருமையைப் பற்றி உரைத்துக்

கொண்டே நெடு வழி கடந்தார். அதன்பின், இராம தாசர் கண்களுக்குப் பத்திராசலக் கோவிலின் சிகரம் தோன்றிற்று. அதனைக் கண்ட அப் பக்தர் பேரானந்த மடைந்தார்; தன்னுடன் வந்த காவலர்க்குப் பத்திராசலத்தின் பெருமையை யெடுத்துக் கூறினார்.

சிறிது நேரத்தில் இராம தாசரும் அவருடன் சென்ற காவலரும் பத்திராசல மலையைச் சேர்ந்தார்; மலைமேல் ஏறி இராம சந்திரரைக் கண் குளிரக் கண்டு தரிசித்தார். பின்னர், இராம தாசர், தான் கட்டுவித்த மண்டபங்களையும் மற்றும் பலவற்றையும் மெய்க் காவலர்க்குக் காட்டினார். பிறகு அனைவரும் மலையினின்றும் இறங்கி ஊருக்குள் சென்றார். இராம தாசரைக் கண்ட அவ் வூர்க் குடிகள், தாய்மாரைக் கண்ட குழந்தைகள்போல் அளவிலாத ஆநந்த முற்றார். அப் பக்த சிரோமணியைக் காண்பதற்குக் கணக்கற்ற மக்கள் வந்தனர். அப் பக்தர், தன்னிடம் வரும் அனைவர்க்கும் கடவுளின் தன்மையை யெடுத்துக் கூறி, அவர்களுக்குக் கடவுளிடத்து நீங்காத பக்தி யுண்டாகும்படி செய்தனர்.

இராம தாசர், ஒரு நாள் பத்திராசல மலைக்குச் சென்று, பகவானைக் கண்டு, கரங்களைச் சிரமேற் கூப்பி, "தாமோதரரே, பாண்டவர் தூதரே, அடியேன் தங்களைச் சுய வுருவத்தோடு கண்டு களிக்கப் பெரிதும் விரும்புகின்றேன். தங்களுக்கு அடியேன் மீது கருணை பிறவாதிருப்பதற்குக் காரணம் யாதோ? பிறவிப் பெருங் கடலினின்றும் அடியேன் கரை யேறுவது என்றோ? இவ் வுடற் சுமையை இன்னும் எத்தனை நாள் யான் பொறுத்துக் கொண்டிருப்பேன். துன்பமும் இன்பமும் கலந்துள்ள இவ் வுலக

வாழ்க்கையே எனக்கு வேண்டா,'' எனப் பரந்தாமனை வேண்டி நின்றார்.

பத்திராசல மலையில் எழுந்தருளி யுள்ள இராம சந்திரர், பக்தன் வேண்டுகோளுக்கு மன மிரங்கி, அசரீரி யாகத் தோன்றி, "அன்ப, நீ சிறிதும் வருந்த வேண்டா. இன்னுஞ் சில நாளைக்குள் உன்னை அழைத்துச் செல்லப் பரம பதத்திலிருந்து ஓர் அழகிய விமானம் வரும்; அதில் ஏறிப் பரம பதம் வந்து என்னை யடைவாய்,'' என்று கூறி யருளி மறைந்தார்.

இராம தாசர், இறைவர் சொல்லி யருளிய இனிய மொழிகளைக் கேட்டுப் பேரானந்த மடைந்தார். பரம பதத்திற்கு விரைவில் செல்லக் கூடும் என்ற களிப்பால் அப் பக்தரது உடல் பூரித்தது; உளம் மகிழ் வடைந்தது; கண்களினின்றும் ஆனந்தத்தால் நீர் பெருகி வழிந்தது. பின்னர், அப் பக்தர், இராம சந்திரரை வணங்கி, வீடு வந்து சேர்ந்தார்.

இராம தாசர், பரம பதத்திலிருந்து வரும் விமானத்தை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்த வண்ணமாய் இருந்தார். ஒருநாள் அப் பக்தர், பத்திராசலத்தில் வசிக்கும் குடிகளுக் கெல்லாம் நற்போதனை புகட்டி நன்னெறியைக் காட்ட வேண்டுமென்று விரும்பினார். அவ் வுத்தமர் அவ்வாறே ஒரு நாள் அவ் வூர்க் குடிகளை யெல்லாம் ஓரிடத்தில் கூட்டினார். பின்னர், இராம தாசர், பெருங் கூட்டத்தை நோக்கி, "அன்பர்காள், இவ் வுலகில் நாம் காணும் பொருள்களெல்லாம் அழியுந் தன்மையை யுடையன. மிகப் போற்றி வளர்க்கப் படும் நமது தேகம், மலைமீது தோன்றும் மேகத்தை யொத்து, விரைவில் அழியும் இயல்புடையது

என்பது உண்மை. இவ் வுடல் அழிந்து படுமாயின், அதனுள் குடியிருக்கும் உயிர், மற்றொரு உடலை நாடிச் செல்லுதலும் இயல்பே. இவ் வண்ணமே மக்களாகப் பிறந்துள்ள நாம், மாறி மாறிப் பிறந்தும் இறந்தும் துன்பத்தையே நுகர்ந்து வருகின்றோம். இப் பிறப்பை ஒழித்தாலன்றி, நமக்கு இன்ப மென்பது சிறிதும் இல்லை. பிறவிப் பிணிக்கு நன் மருந்து கொடுக்கும் நாயகர் எல்லாம் வல்ல இறைவரே. அப் பெருந்தகை, நம்மைக் கருணையால் ஆட்கொள்ளும் பொருட்டே, இராம சந்திரராக இம் மலைக்கண் எழுந்தருளி யுள்ளார். இதனை நீங்கள் அனைவரும் நன்குணர்ந்து, அப் பெருமானை வழிபட்டு உய்யுங்கள்," என்று கேட்போர் உள்ளம் உருகும்படி உபதேசித்தார்.

பத்திராசலக் குடிகள், பக்த சிரோமணியாய் விளங்கும் இராம தாசரின் இனிய மொழிகளைக் கேட்டு இன்பமடைந்தார்கள். பெரியோரின் வாக்குப் பெரும் பயனை விளைவிக்கும் என்பதற் கேற்ப, இராம தாசரின் நற்போதனையால், அவ் வூர்க் குடிகளுக்கு இறைவரிடத்தில் இணையிலாத அன்பு உண்டாயிற்று.

சில நாட்களுக்குப் பின், இராம சந்திரர் கூறிய வண்ணம், இராம தாசரை அழைத்துச் செல்ல, பரம பதத்திலிருந்து ஓர் அழகிய விமானம் வந்தது. அவ் விமானத்தைக் கண்ட பக்தர் எல்லையில்லாத இன்பத்தை யடைந்தார். உடனே, அவ் வுத்தமர், தன்னுடைய மனைவியிடஞ் சென்று, "என்து அன்பிற் குரிய கண்மணீ, நம்மை அழைத்துச் செல்லத் தெய்வ விமானம் வந்து சாக்கின்றது; சீக்கிரம் வருவாய்," என்றார்.

அவரவர் வினையின்படி அவரவர்க்குச் சுக துக்கங்கள் வருகின்றன வாதலால், இராம தாசரின் இன்னுயிர்க் காதலி, வினைப்படி இன்னுஞ் சிலநாள் பத்திராசலத்தி லிருந்து காலத்தைக் கழிக்க வேண்டு மாதலால், இராம தாசரைப் பார்த்து, "நாயக, கை வேலையைச் செய்துவிட்டு வருகின்றேன்," என்றாள்.

இராம தாசர், நாயகி வருவதற்குள் விமானத்தில் ஏறி உட்கார்ந்து விட்டார். உடனே அத் தெய்வ விமானம் பரம பதத்தை நோக்கிக் கிளம்பிற்று. பத்திரா சலக் குடிகளனைவரும், சிரமேற் கரங்களைக் கூப்பி, அப் பக்த சிரோமணியைத் துதித்து வணங்கினர். தேவர் பலர் அவ் விமானத்தின் மேல் பூமாரி பொழிந்தனர்.

இராம தாசரின் இன்னுயிர்க் காதலி, கையிலிருந்த வேலையை விரைவிற் செய்து முடித்து விட்டுத் தெருவில் வந்து நாயகனைப் பார்த்தாள்; அன்பிற் குரிய நாயகர் தெய்வ விமானத்துடன் விண்ணுலகஞ் செல்வதையும், அவ் வூர்க் குடிகள் அப் பக்தரை வணங்கி நிற்பதையுங் கண்டாள். அவள் மனம் மிகவும் வாடிற்று. அம்மாது, உடனே பத்திராசல மலைக்குச் சென்று, ராம சந்திரரைக் கண்டு வணங்கி, 'கருணையின் வடிவாயுள்ள பரமரே, உம் முடைய பக்தர் வாழ்க்கைக்குத் துணைவியா யிருந்து இல் லறத்தைச் செவ்வனம் நடத்திய அடியாளைக் கைவிட்டு விடுதல் உமக்கு அழகோ? என்னுடைய அருமை நாய கரைப் பிரிந்து எவ்விதம் உயிர் வாழ்ந்திருப்பேன்," எனக் கதறி மண்மீது வீழ்ந்தாள்.

இராம தாசர் மனைவியின் பரிதாபமான நிலையைக் கண்ட இராம சந்திரர், மன மிரங்கி, அம் மாதிற்கு அசரீரி

யாகத் தோன்றி, "கற்பிற் சிறந்த பெண்மணீ, கவலையி னின்றும் ஒழிக. உன்னுடைய புத்திரன் தக்க வயதிற்கு வந்து, இராம தாசன் பார்த்து வந்த தொழிலைப் பார்க்கக் கூடிய சக்தியுடையவனாகும் வரைக்கும், நீ எனக்குத் தொண்டு புரிந்து வாழக் கடவாய். பின்னர், உன்னுடைய நாயகன் பெற்ற பதவியை நீயும் பெற்றுப் பரமாநந்த மடைவாய்,'' என்று கூறி மறைந்தருளினர். அம் மாதரசி யும் சில நாள் இறைவன் கட்டளைப் படியே யிருந்து பரம பத மடைந்தாள்.

---

Printed at the T. V. C. Press, Madras.

ஸ்ரீ

# அரும்பத வுரை

பக்கம்

1. திருமகள்-இலக்குமி; பதிக்கு-ஊருக்கு; ஆண்மை-வீரம்; கலனுக-ஆபரணமாக.

2. கலைகளை-சாஸ்திரங்களை; ஐயம்-சந்தேகம்; திரிபு-ஒன்றினை மற்றொன்ருகத் திரித்துணர்தல்.

3. மறையவர்-பிராம்மணர்; வேட்டல்-யாகஞ்செய்தல்; செவ்வனம்-நன்ருய்; தென்புலத்தார்-பிதிரர்; அருமறையாளர்-அருமையாகிய வேதங்களையோதும் பிராம்மணர்; கலைமகள்-சரஸ்வதி; அரன்-சிவன்; மடந்தை-பெண்.

4. மெய்யை-உடம்பை; மகவை-குழந்தையை; ஈன்ருள்-பெற்ருள்; உபநயனம்-பூணுநூற்கிரியை.

5. கடிதின்-விரைவில்; கசடற-குற்றம் நீங்க; சுகுணத்தில்-நல்ல குணத்தில்.

6. மங்கல நாணை-தாலிக் கயிற்றை.

7. இணையடி-இரண்டாகிய பாதம்; வெள்ளிடைமலை-வெளியிடத்திலுள்ள மலை.

8. அண்ணல்-பெருமையிற் சிறந்தோன்; கரி-யானை.

9. படிமிசை-தரைமேல்; உறுதி-நன்மை.

10. மூதாதை-பாட்டன்.

11. தாரக மந்திரம்-இராம நாம மந்திரம்; பாத கமலங்களில்-பாத தாமரைகளில்.

12. அரி-மகாவிஷ்ணு; அரவாபரணன்-பாம்பை ஆபரணமாக வுடைய சிவன்.

13. விமலன்-கடவுள்; தாரம் மனைவி; இருங்கடல்-பெருங்கடல்; பண்ணிப்பெண்-வேலைப் பெண்.

14. உவக்க-ஆனந்திக்க; ஈட்டிய-சம்பாதித்த.

15. வியந்தார்-ஆச்சரியப் பட்டார்; குதூகலம்-ஆனந்தம்; தனயன்-பிள்ளை.

17. கண் கூடாக-பிரத்தியக்ஷமாக.

18. கழலிணை-இரண்டு பாதங்கள்.

19. சாக்காடு-மரணம்; ஆன்ருேர்-அறிவுடையோர்.

20. நவை-குற்றம்; விமலர்-குற்றமற்றவர்

21. நிமலரை-குற்றமற்றவரை; வினயத்துடன்-மரியாதையுடன்.

22. மாலே-மகாவிஷ்ணுவே; மதி-புத்தி.

25. சிறப்பினும்-மோட்சத்தைக்கொடுக்கும்; ஆக்கம்-செல்வம்; ஈட்டி-சம்பாதித்து; அல்லலே-துன்பத்தை.

26. வைகறையில்-அதிகாலையில்.

28. அரியணை-சிங்காதனம்.

30. ஐம்பொறி-மெய், வாய், கண் மூக்கு, செவி; பணியாளர்-வேலையாட்கள்.

32. மாண்புடன்-சிறப்புடன்; ஏறே-சிங்கமே,

35. இம்மையிலும்-இப்பிறப்பிலும்; மறுமையிலும்-மறுபிறப்பிலும்; யாக்கை தேகம்.

39. இறைப்பணம்-வரிப்பணம்; பூதவுடம்பு-மண், நீர், கனல், காற்று, ஆகாய மென்னும் ஐம்பூதங்களால் ஆக்கப்பட்டுள்ள உடம்பு.

40. மாநிலம்-பெருநிலம்; புரக்கும்-காப்பாற்றும்.

46. திரிகரணம்-மனம், வாக்கு, காயம்.

48. விளித்து-கூப்பிட்டு.

51. கரி-யானை; உன்னி-நினைத்து; கராவை-முதலையை; அரி-மகாவிஷ்ணு.

52. பரந்தாமர்-மேலான இடத்திலுள்ள கடவுள்.

53. மடமை-அறியாமை; இருவினை-நல்வினை, தீவினை; அல்லும்-இரவும்.

54. தனிக்கோலம்-ஒப்பற்ற பன்றி; வேழம்-யானை; பாதாரவிந்தம்-பாதமாகிய தாமரை; பொதுவர்-இடையர்; இன்னலை-துன்பத்தை; கிரி-மலை.

57. அந்தப்புரம்-அரசன்; மனைவிமார் இருக்குமிடம்.

58. ஒலி-சப்தம்.

60. மேனி-உடம்பு; புழுதி-மண்.

63. சென்னியில்-தலையில்.

65. வழுத்தினர்-துதித்தார்.

67. இழைத்துள்ள-செய்துள்ள.

69. மெய்க்காவலர்-உடம்பைப் பாதுகாப்பதற்காக உடனிருப்பவர்.

71. அசரீரி சரீர மில்லாதது.

72. நுகர்ந்து அனுபவித்து; இணையிலாத-ஒப்பிலாத.

73. பரமபதம்-வைகுந்தம்.

126465

சென்னை:

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு ஸன்ஸ்

வெளியிட்ட புதிய தமிழ் புத்தகங்கள்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | சென்னை இராஜதானி பூகோளம் | 0 | 7 | 0 |
| 2. | மதுரை ஜில்லா பூகோளம் ... | 0 | 4 | 0 |
| 3. | திருநெல்வேலி ... ... | 0 | 4 | [illegible] |
| 4. | சேலம் ... ... | 0 | 4 | [illegible] |
| 5. | திருச்சினாப்பள்ளி ... ... | 0 | 4 | [illegible] |
| 6. | தஞ்சாவூர் ... ... | [illegible] | 4 | [illegible] |
| 7. | தென்னாற்காடு ... ... | 0 | 4 | 0 |
| 8. | வட ஆற்காடு ... ... | 0 | 4 | [illegible] |
| 9. | கோயம்புத்தூர் ... ... | 0 | 4 | 0 |
| 10. | செங்கற்பட்டு ... ... | 0 | 4 | 0 |
| 11. | இளைஞர் சொற்றொடராக்கம் ... | 0 | 4 | 0 |
| 12. | சிறுவர் சொற்றொடராக்கம் ... | 0 | 6 | 0 |
| 13. | இளைஞர் இலக்கணம் ... ... | 0 | 2 | 0 |
| 14. | முதல் வகுப்புக் கணிதம் ... | 0 | 2 | 0 |
| 15. | இரண்டாம் ,, ... ... | 0 | 3 | 0 |
| 16. | மூன்றாம் ,, ... ... | 0 | 4 | 0 |
| 17. | நான்காம் ,, ... ... | 0 | 6 | 0 |
| 18. | ஸ்ரீராம சரித்திரம் (முதற்பாகம்) ... | 0 | 8 | 0 |
| 19. | (இரண்டாம்பாகம்) ... | 0 | 6 | 0 |
| 20. | (மூன்றாம்பாகம்) ... | 0 | 6 | 0 |
| 21. | நளசரித்திரம் ... ... | 0 | 3 | 0 |
| 22. | ஸ்ரீ பாண்டவ சரித்திரம் (முதற்பாகம்) | 1 | 0 | 0 |
| 23. | ,, (இரண்டாம்பாகம்) | 1 | 4 | 0 |
| 24. | ,, (மூன்றாம்பாகம்) | 1 | 4 | 0 |
| 25. | சாவித்திரி சரித்திரம் ... ... | 0 | 3 | 0 |
| | இங்கிலீஷ் தமிழ் காப்பி புத்தகங்கள் பிரதி 1-க்கு | 0 | 2 | 0 |
| | ... ... டஜன் | 1 | 2 | 0 |
| | 6-டஜன் அல்லது ½-குரோசுக்கு ,, | 6 | 8 | 0 |
| | 12-டஜன் அல்லது 1 குரோசுக்கு ,, | 12 | 0 | 0 |
| | 40-பேஜி எக்ஸசயிஸ் நோட்புக் 1-க்கு | 0 | 1 | 0 |
| | ,, குரோசுக்கு | 7 | 0 | 0 |
| 26. | பிரகலாதன் ... ... ... | 0 | 8 | 0 |
| 27. | ஊர்வசி ... ... ... | 0 | 3 | 0 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 APR 1926
MADRAS